www.tamilarangam.net

# சிந்தனை

பங்குனி

1994



தெருவோர நடைபாதையில்
ஏழ்மையின் அரைநிர்வாணத்துடன்
ஒரு இரவல் அடுப்பில் சோறு சமைத்துண்ணும் பெண்ணே!
உனக்கு நான் சொல்வது இதுதான்:
வாழ்ந்து விடு தொடர்ந்தும் வாழ்ந்துவிடு.
கற்பனைகள் நிறைந்த முகத்துடன்
பூங்கா வாங்கினில் அமர்ந்திருக்கும்
வெருட்சி மிக்க பெண்ணே!
உனக்கு நான் சொல்வது:
வாழ்ந்து விடு, வாழ்ந்து விடு.
வெப்பம் செப்பனிடப்பட்ட
கிராமத்துப் பெரிய பங்களாவில்,
அலங்காரங்களுடன் அமர்ந்திருக்கும்
கவலைகள் நிறைந்த பெண்ணே!
வாழ்ந்து விடு, வாழ்ந்துவிடு.
நடுநிசியில் வீடு வரும்
குடிகார கணவனிற்கு விலைக்கு
வாழ்க்கைப்பட்ட ஏதுமறியா மணமகளே!
வாழ்ந்து விடு பெண்ணே, வாழ்ந்து விடு.
நீ நிறைய நிறைய அளவின்றி வாழ்ந்து விடு.

**SINTHANAI**
***MARCH 1994***

**1/94**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடிவானம் சிவந்திருக்கின்றது

அப்படியானல் என் தேசம் ஏன்
இருட்டாய் இருக்கின்றது?

இந்த பூச்செறித்த போதி மரத்தின்
கீழ் சாயம் வெளுத்த புத்தன்
கண்ணுறக்கமோ?

என் தேசத்திற்கு இத்தனை
காவலர்களா? அங்கே பசுமை இல்லை
ஆனால்
நிறையவே படை வீரர்கள்
இருக்கின்றார்கள் . . .

இவர்களது துப்பாக்கிகள்
மௌனம் சாதித்துக்
கொண்டிருக்கின்றன
அப்படியானால் எப்படி
இத்தனை மண்டையோடுகள்
குவிந்து கிடக்கின்றன?

நிலம் கழுவப்பட்டிருந்தது
இவர்களின் பூட்சுகளில் மட்டும்
இரத்தக்கறை எங்கிருந்து வந்தது?

மனிதர்கள் மௌனித்திருந்தார்கள்
அப்படியானால் புரட்சி எங்கிருந்து
வந்தது? . . . .

அப்பாவிகள் அடக்கம்
செய்யப்பட்டிருந்தார்கள்
அப்படியானால் கல்லறைகளை
ஏன் காணவில்லை?


குறி பார்த்து சுடும் சிறந்த
இராணுவ வீரர்கள் என்கிறார்களே?
அப்படியானால்
இவர்கள் ஏன் அடிக்கடி
அப்பாவி மக்களை சுட்டுக்
குவிக்கிறார்கள்?

புனித பூமி என்கிறார்களே?
அப்படியானால்
புத்தன் எங்கே போனான்?

சுடுவதற்கும் எரிப்பதற்கும்
புதைப்பதற்கும்
சுதந்திரத்தை இவர்கள் யாரிடம்
பெற்றுக்கொண்டார்கள்?

இவர்கள் சுவாசித்துக் கொண்டிருக்கும்
காற்று இறைவனின்கையில்
மட்டுமேயுண்டு என்பதை இவர்கள்
ஏன் மறந்து போனார்கள்?

ஜி.மோனிக்கா



www.tamilarangam.net

# தஸ்லீமா நஸ்ரீன்



யார் இந்த தஸ்லீமா நஸ்ரீன் ?

அவரைக் கொல்பவருக்குப் பரிசாக ரூ. 50,000 வெகுமதி கொடுக்க ஒரு முஸ்லீம் அடிப்படைவாதக் குழு முன் வந்திருக்கின்றது. அவரின் புத்தகங்களை தடைசெய்ய வேண்டும். அவர் கைது செய்யப்பட வேண்டும் என்று இக்குழு பங்களாதேஷ் நகரங்களில் ஹர்த்தால்களை நடத்துகின்றது. பங்களாதேஷ் தெருக்களின் அவரின் கொடும்பாவி எரிக்ககப் பட்டது. இஸ்லாத்திற்கு எதிராக எழுதியதற்கு எதிராக கோட்டில் வழக்கும் தொடர்ந்துள்ளார்கள்.

இத்தனைக்கும் அவர் செய்த குற்றந்தான் என்ன?

தன் பேனாவினால் சில கவிதைகளை......... சில உரை நடைகளை....... எழுதியுதுதான் அவர் செய்த குற்றம்.
இந்த எழுத்துக்கள் ஆணாதிக்க சமூகத்திடம் பெண்களின் மனித ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தியதுதான் குற்றம்.
இவை சாதாரணமான எழுத்துக்கள்........... பெண்நிலைவாதிகள் எழுதும் எழுத்துக்கள்.......

ஆனால்

தஸ்லீமா நஸ்ரீன் முஸ்லீம் சமூகத்தில், முஸ்லீம் குடும்பத்தில் பிறந்த முஸ்லீம் பெண்.

அவள் வாழும் நாடு இஸ்லாத்தை அரசாங்க மதமாகக் கொண்ட ஒரு நாடு.
இவற்றிற்கு மேலாக தஸ்லீமா நஸ்ரீன். ஒரு பெண்.

அவரின் எழுத்துக்கள் சமூகத்தில், குடும்பத்தில் இடம் பெறும் ஒவ்வொரு பெண் ஒடுக்குமுறையின் அலகையும் அக்கு வேறு ஆணிவேறாகக் எடுத்து தயவு தாட்சணியமின்றி விமர்சிக்கின்றன. சாதாரண மக்களின் மொழியில், சமூகத்தின் மனச்சாட்சியை, ஆணாதிக்கத்தின் அடித்தளத்தை தாக்கும் வகையில், சமயத்தின் போலி முகத்திரைகளை கிழிக்கும் வகையில் அவரின் பேனா இயங்குகின்றது. இதுதான் இன்று தஸ்லீமா நஸ்ரீனை மரணத்தின் முன் நிறுத்தியுள்ளது.

தஸ்லீமா நஸ்ரீன் எழுதிய, மனித உரிமைக்காகக் குரல் கொடுக்கும், நாவல் "லஜ்ஜா" ( வெட்கம் ) தமது உரிமைகளுக்கு சர்வதேசரீதியாகக் குரல் கொடுப்பவர்கள் தம் மத்தியில் உள்ளவர்களின் உரிமைகளை மறுக்கும் வெட்கக் கேட்டை வெளிக் கொண்டுவந்துள்ளது. பார்பி மசூதி இடிக்கப்பட்ட பொழுது – எண்ணற்ற முஸ்லீம்கள் இந்தியாவில் பாதிக்கப்பட்ட பொழுது – பங்களாதேஷில் பாதிக்கப்பட்ட இந்துக் குடும்பம் ஒன்றின் கதை இது. இதுவும் முஸ்லீம் அடிப்படைவாதிகளைக் கோபமூட்டிய விடயங்களில் ஒன்று.

இன்று உலக பெண்நிலைவாதிகளும், மனித உரிமைவாதிகளும் தஸ்லீமா நஸ்ரீனின் எழுத்துரிமைக்கும் சுதந்திரத்திற்காகவும் குரல் கொடுக்க வேண்டியது .அவசியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நான் மரணம் பார்த்து விட்டேன்

: தஸ்லீமா நஸ்ரீன்

## 1.

" பெண்களின் சமூக, சமய பெறுமானங்களினைப் பாதுகாக்கும் விதமாக, பங்களாதேஷின் வயது வந்த பெண்கள் அனைவரும் அணியும் சேலைகளின் அளவு 1.22 x 5.54 மீற்றர்களாய் இருத்தல்வேண்டும். இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டு வரும் ஏழு நாட்களுக்குள் அனைத்துப் பெண்களும் இதை நடைமுறைப்படுத்தல் வேண்டும். இந்த அறிவித்தலை எதிர்ப்பவர்களும் மறுப்பவர்களும் சட்டப்படி குற்றவாளிகள் ஆகின்றனர்." என்ற முக்கிய அறிவிப்பு கடந்த மார்ச் 28 அன்றைய பங்களாதேஷின் செய்திப்பத்திரிகைகளில் இடம்பெற்றது. பங்களாதேஷ் அரசாங்கமே இந்த அறிவிப்பை விடுத்திருந்தது.

ஏற்கனவே ஆபத்தான நிலையிலிருந்த பெண்களின் சமூக, சமய பெறுமானங்கள் அவர்களின் சேலையின் நீள அகலத்தை வரையறை செய்யும் இந்த முறையினால் மேலும் மோசமாகியுள்ளது. ஒரு சேலையின் அளவினையும் அதன் நிறத்தையும் நிர்ணயிப்பது அதை அணியும் பெண்ணின் அளவும், அவளது விருப்பமும், அவளது பணப்பையிலுள்ள பணமுந்தான். சேலையினை அளவுகோலாகக் கொண்டு பெண்களை அளவிட முனைவது அவமதிப்பு மட்டுமல்ல சட்டத்திற்கும் முரணானது இது. நுகர்வோரின் விருப்பத்தின் (கேள்வி, demand) அடிப்படையிலேயே ஆடையுற்பத்தியாளர்கள் பலவித அளவிலான சேலைகளைத் தயாரிக்கிறார்கள். நான் 12 முழ சேலையை அணிகின்றேன், இது எந்தவிதமான சமய விதிகளுக்கமையவும் அல்ல, நான் அணிவது எனக்குப் பொருத்தமாகவிருக்கிறது அவ்வளவே. வெளியே சென்று வேலை பார்க்கும் கிராமத்து வறிய பெண்களுக்கு 10 முழ அளவிலான சேலைகளே விருப்பத்தக்கனவாகவும், உடுக்கவசதியானவையாகவும் இருக்கின்றன.

இந்த நாட்டைச் சேர்ந்த பல பெண்கள் ஒரு சேலையை மூனறாக வெட்டி மூன்று சேலைகளாக்கிப் பாவிக்கும் நிலையில் உள்ளவர்கள். சிலர் தாம் தோய்த்த சேலையை உடலில் அணிந்த வண்ணமே உலரவும் விடுகின்றனர், மாற்றுவதற்கு வேறொரு சேலை அவர்களிடம் இல்லை. சிலர் வீடுவீடாய் இரந்து வேண்டியே தமது மானத்தை மறைக்கின்றனர். சாதாரணமாக ஒரு சேலை அணிவதே பெரிய கேள்விக்குறியாகவிருக்கும் இத்தகையப் பெண்களுக்கு 5.5 மீற்றர் சேலை தான் கட்டாயம் கட்டவேண்டும் என்று கட்டளை விடுத்திருக்கிறது அரசாங்கம். மதத்தை எமது சேலைகளின் நீளம் அகலம் என்ற மட்டத்திற்கு கீழிறக்கிக் குறுக்குவதன் மூலம் மதத்தை அகௌரவப்படுத்தியிருக்கிறது அரசாங்கம்.

## 2.

இரண்டாவது தடவையாக முஸ்லீம் புத்திஜீவிகளினாலும் தலைவர்களினாலும் எனக்கு மரணம் முன்மொழியப்பட்டுள்ளது.

" சாத்தானின செய்யுள் " நாவலிற்காக சல்மான் ருஷ்டிக்கு மரணதண்டனை வழங்கப்பட்டபோது அவரின் உரிமைக்காக குரல் கொடுத்ததற்காய் முதன்முறையாக எச்சரிக்கப்பட்டேன்.

" பர்தா " விற்கு எதிரானவள் என்று இபொழுது இரண்டாவது தடவையாக மரணத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளேன்.

எனக்குத் தெரியும் ஒருநாள் அவர்கள் என்னை " அல்லாவே பெரியவர் " என்ற கோஷத்தோடு கொலை செய்வார்கள்.

அதையிட்டு நான் அஞ்சவில்லை.

வீதியில் இறங்கினால் விபத்தில் அகப்படும் அபாயம் இருக்கிறது என்பதற்காக நான் வீதியில் இறங்கி நடக்காமல் இருப்பதில்லையே. மின்சார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உபகரணங்களைப் பாவிக்கும் போது மின்னதிர்ச்சியினால் மரணம் சம்பவிக்கும் அபாயம் உண்டு. அதற்காக நான் அவற்றைப் பாவிக்காமல் விடுகிறேனா? இல்லையே. அதுபோலத்தான் இதுவும் எனக்கு. இந்த சமூகத்தில் தான் நான் தொடர்ந்தும் வாழவேண்டும். அதுவொரு புலியைப் போல என்னைப் பிடித்து தின்ன வருகின்றது. அது எ.ர் மீதான கொலைவெறியை நிறுத்தாது என்று தெரிந்தபோதும் நான் வாழத் தான் வேண்டும். வாழத்தான் போகிறேன். தமது பேனாக்களை அநீதியுடன் சமரசம் செய்து கொள்ள மறுப்பவர்கள் என்றும், நியாயத்திற்கான தமது குரலை இன்னமும் முற்றாக மௌனமாக்கிக் கொள்ளாதவர்கள் என்றும் ஆண்களில் எவராவது இன்னமும் இருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. சில ஆண்கள் இருக்கிறார்கள் அவர்கள் ஒரு பெண்ணின் பக்கம் நியாயம் இருந்தபோதிலும் அவளுடன் சரிசமமாய் குரல் கொடுப்பதை ஒரு தர்மசங்கடமான நிலையென நினைப்பவர்கள்.

ஒருவேளை, நான் ஒரு பெண்ணாய் பிறந்ததன் பாவத்தை கழுவுவதற்காகஎன்னை அவர்கள் கொல்வதை அமைதியாய் அனுமதிக்க வேண்டுமோ தெரியவில்லை.

## 3.

" உன் மனைவி இறந்தால் உனக்கு அதிர்ஷ்டம் உண்டு. உன் கால்நடை இறப்பின் அது உன் துரதிர்ஷ்டம் " என்றொரு பழமொழி வழக்கத்தில் உண்டு.
21ம் நூற்றாண்டை நெருங்கிவிட்ட இந்த காலத்திலும் செவிகளுக்கெட்டும் பழமொழி இது.
உனது மனைவி இறந்துவிட்டாள், நீ இன்னொருத்தியை மணக்கிறாய். நீ புதிய கால்நடை வாங்குவதானால் அவற்றிற்கு எப்படியும் பணம் கொடுத்தே ஆகவேண்டும். இதோடு ஒப்பிடுகையில் வருகின்ற புதுமணமகள் வரும்போது தன்னுடன் பணத்தையும் கொண்டுவருவாள். உனது மனைவியை அலட்சியம் செய்வது போல் கால்நடையை அலட்சியம் செய்துவிடமுடியாது. இங்கு மனைவியை விடவும் கால்நடை அதிக பெறுமதி வாய்ந்தது என்பது ஒன்றும் அதிசயமில்லை.

அண்மையில் பங்களாதேஷ் இளம்பெண்ணொருத்தி விற்கப்பட்டாள். இவளை விற்றவர்கள் இவளது பெறுமதிக்காகப் பெற்றுக் கொண்டது இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட ஆறு கால்நடைகளை! இந்தச் செய்தியைக் கேட்டு பலர் கலவரப்பட்டுள்ளனர். ஆனால் என்னை இது பெரிதும் வியப்பில் ஆழ்த்தவில்லை. இந்த நல்ல செய்தியைக் கேட்டுச் சந்தோஷப்படுவதைத் தவிரவும் வேறொரு வழி எனக்குத் தெரியவில்லை.
சந்தோஷமாக இருக்காதா என்ன? ஒரு பெண்ணின் விலையாக ஆறு கால்நடைகளைப் பெறுவதென்பது எவ்வளவு பெரிய விடயம் தெரியுமா?
கால்நடைகளைப் பெற்றுக் கொண்டவரைப் பொறுத்தவரையில் இது நல்லவொரு இலாபகரமான வியாபாரமாக இருந்திருக்கவேண்டும். இந்த ஆறு கொழுத்த, அழகான கால்நடைகளும் பலவீனமான மெலிந்த பங்களாதேஷிய இளம்பெண்ணொருத்தியை விடவும் பெறுமதி மிக்கதும் உபயோகமானதும் தானே? பெண்ணை விற்றவரைப் பொறுத்தவரையில் இலாபம் தான், பெண்ணிற்கு எந்த பெறுமதியும் இல்லாத நாட்டிலே அவளைக் கொடுத்து ஆறு கால்நடைகளைப் பெற்றுவிட்டாரே. பெண்ணை வாங்கியவர்கள் தான் பாவம். பெண்ணிற்கு எந்த பெறுமதியும் இல்லாத நாட்டிலே ஆறு கால்நடைகளைக் கொடுத்த இவர்கள் ஏமாற்றப்பட்டவர்கள் இல்லையா? நான் அந்த கால்நடை கடத்தல்க் காரர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.
இந்த நிகழ்வானது பெண்களின் பெறுமானத்தைக் கொஞ்சமாவது உயர்த்துமானால் நல்லது தான்.
மரியாதைக்குரிய எமது சமூகத்திலே பெண்ணிற்கு எவ்வித பெறுமதியும் இல்லை.
பெண்குழந்தை கருவிலேயே அழிக்கப்படுகிறாள் அல்லது ஆறு கால்நடைகளுக்காக ஒரு கடத்தல்காரனுக்கு விற்கப்படுகிறாள்.

## 4.

தஸ்லீமா நஸ்ரீன் இறந்துவிட்டாள்.
ஆம் அவள் இறந்துவிட்டுத்தான் இருந்தாள்.
இப்பொழுது மீண்டும் வாழ்கிறாள். மீண்டும் சுவாசிக்கிறாள். தூயகாற்றைத் தன் நுரையீரல்களுக்குள் நுழையவிடுகிறாள். பசுமையின் வாசத்தை நுகர்கிறாள். சூரியவொளியிலும், நிலவொளியிலும், மழையிலும் அவள் நனைகிறாள், அவைகளாகவே மாறுகிறாள்.
மரணம்
எவ்வளவு பயங்கரமானதும் அருவருப்பானதும் என்பதை அவள் பார்த்துவிட்டாள். பயங்கர எதிர்ப்பின் தூசண வார்த்தைகளை அவள் கேட்டுவிட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரணத்தை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரிகிறது வாழ்வு எத்தனை மகிழ்ச்சிகரமானதும் அற்புதமானதும் என்று.
நான் வாழ்கிறேன்.
தெருவோர நடைபாதையில் ஏழ்மையின் அரைநிர்வாணத்துடன் ஒரு இரவல் அடுப்பில் சோறு சமைத்துண்ணும் பெண்ணே! உனக்கு நான் சொல்வது இதுதான்: வாழ்ந்து விடு தொடர்ந்தும் வாழ்ந்துவிடு.
ஒப்பனைகள் நிறைந்த முகத்துடன் பூங்கா வாங்கினில் அமர்ந்திருக்கும் வெருட்சி மிக்க பெண்ணே! உனக்கு நான் சொல்வது: வாழ்ந்து விடு, வாழ்ந்து விடு.
வெப்பம் செப்பனிடப்பட்ட கிராமத்துப் பெரிய பங்களாவில், அலங்காரங்களுடன் அமரந்திருக்கும் கவலைகள் நிறைந்த பெண்ணே! வாழ்ந்து விடு, வாழ்ந்துவிடு.
நடுநிசியில் வீடு வரும் குடிகார கணவனிற்கு வீணுக்கு வாழ்கைப்பட்ட ஏதுமறியா மணமகளே! வாழ்ந்து விடு பெண்ணே, வாழ்ந்து விடு.
நீ நிறைய நிறைய அளவின்றி வாழ்ந்து விடு.
அவர்களைப் பற்றிக் கவலை கொள்ளாதே!
அவர்கள் மனிதர்கள் அல்ல, அவர்கள் ஆண்கள்.
அவர்கள் உனது தேனீரில் இரகசியமாக நஞ்சைக் கலப்பவர்கள்.
அவர்கள் இருண்ட இரவில் உனது கழுத்தில் கயிற்றால் சுருக்கிட்டு மரத்து கிளையொன்றில் தொங்கவிடுபவர்கள்.
அவர்கள் ஒரு குழுவாக வந்து உன்னைப் பலாத்காரப்படுத்துபவர்கள்.
அவர்கள் உன்னைக் கஹ்பூர் பாலத்தில் வைத்து கத்தியால் குத்துபவர்கள்.
அவர்கள் உன்னை ஓடும் ரெயிலினுள் வீசிக் கொலை செய்பவர்கள்.
அவர்கள் உனது மூச்சுக்குழாய்களை கூரிய பிளேடினால்(சவர அலகு) வெட்டித் திறப்பவர்கள்.
அவர்கள் உன் மேல் பெற்றோல் ஊற்றி நெருப்பு மூட்டி கொலை செய்பவர்கள்.
அவர்கள் மனிதர்கள் அல்ல பெண்ணே, அவர்கள் ஆண்கள்.
அவர்கள் எருசலேமிலும் இமயமலையிலும் ஹேரா மலைகளிலும் மதங்களை உருவாக்கினார்கள். மதம் புனிதமானது என பிரகடனப்படுத்தினார்கள். இந்தப் புனிதத்தின் பெயரால் உன்னைத் தமக்கேற்ற வகையில் வளைந்து கொடுக்க வைத்தார்கள், தமது வலைக்குள் உன்னை சிக்க வைத்தார்கள். அவர்களின் கால்களின் எல்லையே உனது வாழ்விடம் என்று உனது இருப்பை வரையறை செய்தார்கள். அவர்கள் உன்னைச் சமையலறைக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் உன்னிடம் வரி அறவிடுகிறார்கள். அவர்கள் தமக்கு விருப்பமான போது உன்னைக் கட்டிலுக்கு அழைத்து தேவையற்ற போது துரத்திவிடுகிறார்கள். அவர்கள் தமக்கு தேவையான போது உன்னை ஆடைகளினால் மறைக்கிறார்கள், தமக்கு தேவையான போது உன்னை நிர்வாணமாக்குகிறார்கள்.
அவர்கள் மனிதர்கள் அல்லர், அவர்கள் ஆண்கள்.
வாழ்ந்துவிடு பெண்ணே, வாழ்ந்துவிடு.
இந்தத் தூய காற்றை நீ சுவாசிக்கவேண்டும். இந்த வானும் விண்மீன் கூட்டமும் உன்னுடையவை. இந்த இலைகள், காடுகள், புற்கள், பூக்கள் யாவும் உன்னுடையவை. வீசும் காற்றும் உனதே. நீரும் நிலமும் கடலும் மலையும் உன்னுடையவையே.
இந்த ஆண்கள் உனக்கு முக்கியமில்லாதவர்கள்
உன்னை விழுங்குபவர்கள், உன்னைத் துண்டுதுண்டாய் பிய்த்துவிடுபவர்கள். அவர்களின் தூளாக்கலில் நீ தூசாகிப் போய்விடுவாய்.
ஆம் அவர்கள் செய்வது அதைத் தவிர வேறென்ன உன்னை உடைத்துத் தூள் தூளாக்குவார்கள்.
அவர்கள் மனிதர்கள் அல்லர், அவர்கள் ஆண்கள்.
உடலெல்லாம் அவர்கள் விதைத்து விட்ட புண்களுடன் நீ தரையில வீழ்ந்து கிடப்பாய். உன்னை முகர்ந்து வரும் நாயும் உன்மேல் இரக்கங் கொள்ளும். வட்டமிடும் காகங்களும் கழுகுகளும் கூட உனக்காக அனுதாபம் கொள்ளும்.
ஆனால் உன்னை மீண்டுமொருமுறை கடித்துக்குதற வருவது பன்றியோ, பாம்போ அல்ல பெண்ணே, அது மீண்டும் ஒரு ஆண்தான்.
எழுந்துவிடு பெண்ணே எழுந்துவிடு! உனது எலும்புகளைச் சீராக்கு! புறப்படு! இதோ இந்த வீதி, இது உன்னுடையது.
இந்த விளைநிலங்களும் பயிர்களும் உன்னுடையவை. உன் விழி விரியும் திசையெலாம் தெரிவனவெல்லாம் உன்னுடையவையன்றி வேறில்லை பெண்ணே.

நான் மரணம் பார்த்துவிட்டேன்.
நான் நெருப்பைக் கண்டுவிட்டேன்.
நான் பாம்பைக் கண்டுவிட்டேன்.
நான் இருளைத் தரிசித்துவிட்டேன்.
நான் பாதள விளிம்பைக் கண்டுவிட்டேன்.

நான் விரிக்கப்பட்ட வலையைக் கண்டுவிட்டேன்.
இவற்றையெல்லாம் பார்த்துவிட்ட நான் தொடர்ந்து மேலும் மகிழ்வுமிக்க வாழ்வினை சென்றடைகின்றேன்.
நான் புகைபிரத பாலங்களைக் கடக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் கஹ்பூர் பாலத்தால் நடக்கிறேன்.
நான் அச்சமூட்டும் இருளினூடு பயணிக்கிறேன். நான் ஒரு பெண் என்பதில் பெருமை கொள்கிறேன்.
நான் ஒரு பெண் ஆதலால் எனது ஒவ்வொரு இரத்தத்துளியும் தூய்மையானது.
நீ ஒரு பெண்ணானால் மரணத்தை வெற்றி கொண்டு வாழ்ந்துவிடு.
அவர்கள் உனக்கு தூய்மை பற்றி கற்பைப் பற்றி கன்னித்தன்மை பற்றி கதைகள் சொல்லி உன்னைக் கொழுத்தி கொலை செய்வார்கள்.
அவர்கள் பெண்மை என்றால் என்னவென்று விளக்கமளிக்க விரும்பி உன்னிடம் வருவார்கள்.
தாய்மையடைவதிலுள்ள மகிழ்ச்சியை உனக்கு கூற முற்படுவார்கள். நீ அவர்களின வலையில் வீழ்ந்து விட்டாயானால் அவர்கள் உன்னை முத்தமிடுவார்கள், தம்முடன் ஆடுவதற்கு அழைத்துச் செல்வார்கள்.
உன்னைச் சுற்றிச் சுவர்கள் எழுப்பி, உனது கைகளில் பொன் விலங்கிட்டு உணவூட்டுவார்கள். நீ ஒரு கூண்டுக்கிளியாகிப் போவாய்.
நீ ஒரு மனிதப்பிறவியெனில் கட்டுக்களை அவிழ்த்தெறிந்துவிட்டு எழுந்துவிடு.
விலங்குகளை உன் கைகளினால் உடைத்தெறிந்துவிட்டு பார், இப்போதிவை உனது கைகள். உனது கால்களினால் நட, இப்போதிவை உனது கால்கள்.
உனது விழிகளினால் பார், இப்போதிவை உனது விழிகள்.
சிரி!
இந்த முகமும் கண்ணும் வாயும் உன்னுடையவை.
அவை முழுக்க முழுக்க உன்னுடையவை.
நீ உனக்கு மாத்திரமே சொந்தமானவள்.

அதோ பார்த்தாயா?
அவர்கள் வருகிறார்கள்.
உன்னைக் கடிப்பதற்கு, உன்னைச் சுவைப்பதற்கு, உன்னைக் கிழிப்பதற்காக அவர்கள் வருகிறார்கள்.
அவர்கள் மரணத்தின் மறுபெயர் தவிர வேறெதுவுமில்லை. காட்டுமிராண்டித்தனத்தின் இன்னொரு பெயர் அவர்கள்.
அவர்கள் வந்துவிட்டார்கள்.
உன்னை பருகுவதற்கு, உன்னை விழுங்குவதற்கு உன்னை உடைப்பதற்கு அவர்கள் வந்துவிட்டார்கள்.
அவர்கள் ஆண்கள் பெண்ணே, அவர்கள் மனிதர்கள் அல்லர்.
ஜாக்கிரதையாக இரு பெண்ணே உன்னிடம் வந்த ஆண்கள் கடிவாளமற்ற விருப்பங்களுடனும் கட்டுக்கடங்காத கோபத்துடனும் வாழுபவர்கள்.
ஆனால் அவர்கள் வாழும் இந்தவுலகு உனக்கும் சொந்தமானது. நீ இதில் உனக்கு வரும்பியவாறு வாழ்ந்து விடு. இந்த புவியொரு நதி. நீ அதல் நீந்தி விளையாடு. இந்த புவியின் வானம், அதன் ஒரு எல்லை தொடங்கி மறு எல்லை வரை சிறகடித்து பறக்கவேண்டும் நீ.
இந்த வாழ்க்கை உன்னுடையதாயின், உண்மையிலேயே அது உன்னுடையதாயின் வாழ்ந்துவிடு பெண்ணே வாழ்ந்துவிடு. உனக்கு விரும்பிய விதத்தில் வாழ்ந்துவிடு.

நான் மரணம் பார்த்துவிட்டேன்.
நான் பாவங்களைச் சந்தித்தேன்.
நான் அழுக்களினூடாகப் பயணம் செய்தேன்.
இனி வேறெந்தவொரு பெண்ணும் முற்கம்பிகளினூடாக பயணம் செய்கிற வாழ்வை வாழவேண்டி வராது. துண்டுதுண்டாகக் கிழிபடவேண்டி வராது. இனி வேறெந்தவொரு பெண்ணும் தனது இலக்கையடைவதற்கு அடர்ந்த காடுகளைக் கடக்கவேண்டி வராது.
ஆண்கள் உருவாக்கிய வளைகளில் ஊர்ந்து ஊர்ந்து இரத்தம் சிந்தும் வாழ்வு இனி எந்த பெண்ணுக்கும் வராது.
பசித்திருக்கும் பெண்ணே நீ வாழ்ந்துவிடு.
போசாக்கற்றவளே நீ வாழ்ந்துவிடு.
குழந்தை பெற முடியாதவளே நீ வாழ்ந்துவிடு.
வீடுவீடாய் கந்தைத்துணி சேர்க்கும் சிறுபெண்ணே நீ வாழ்ந்துவிடு.
பெண்ணே நீ வாழ்ந்துவிடு.
நான் எனது கஷ்டங்களையெல்லாம் கலைந்தெறிந்துவிட்டு இங்கு வந்து நிற்கிறேன். நான் வெறுப்பையும் அவமரியாதையையும் நிராகரிக்கிறேன்.
யவ்வனத்துடன் நீ ஐக்கியமாகி விடு.
உனது கனவுகளை விடாமல் இறுகப்பிடித்துக் கொள் பெண்ணே.

மூலம்: தஸ்லீமா நஸ்ரீன்
தமிழில்: சந்துஷ்

(தஸ்லீமா நஸ்ரினின் பத்திரிகைப் பத்திகள் சிலவற்றை ஜேர்மனியில் வெளிவரும் பத்திரிகையான Die Tageszeitung தொகுத்து வெளியிட்டுள்ளது. அவற்றின் தமிழாக்கமே இது.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியல் குறிப்புக்கள்

இலங்கையில் இனப் பிரச்சனை என்று ஒன்று இல்லை, இருப்பது பயங்கரவாதப் பிரச்சனை மட்டுந்தான்!
பெரும்பான்மை ஒரு விருசம், சிறுபான்மை இனங்கள் அதில் படரும், தங்கியிருக்கும் கொடிகள்.
தமிழ் மக்களுக்கென ஒரு பாரம்பரியப் பிரதேசம் கிடையாது. அப்படியான எண்ணங்களைத் தகர்த்தெறிவேன்' என சிறில் மத்தியு பாணியில் இனவாதத்தைக் கக்கிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயத்துங்காவிற்கு தென் மாகாண சபைத் தேர்த்தல் சரியான பாடத்தைப் புகட்டியுள்ளது.

எழுப்த்தியைந்து வீதமான வாக்காளர்கள் வாக்களித்த தென் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 443,132 வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்டது. பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டு மக்கள் முன்னணிக்கு 556,512 வாக்குகள் கிடைத்துள்ளன. தென் மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 23 ஆசனங்களும் எதிர்க்கட்சியினருக்கு 32 ஆசனங்களும் கிடைத்துள்ளன.

பிரேமதாசாவிற்குப் பின் பதவியேற்ற டிங்கிரி பண்டா விஜயதுங்கா தான் எந்த விதத்திலும் சளைத்தவர் இல்லை என்ற தோரணையில் தமிழ் மக்களின் எச்ச சொச்ச உரிமைகளையும் ஊதாசினம் செய்யத் தொடங்கினார். இலங்கையின் இனப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வைவைத் தவிர வேறு எந்தத்தீர்வையும் முன்வைக்க விரும்பாத ஒரு அப்பட்டமான இனவாதியாக சிங்களமக்களுக்குத் தன்னைகாட்டி அவர்களின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடனேயே அவருடைய செயற்பாடுகள் அமைந்தன. பிரேமதாசா காலத்தில் பேச்சு வார்த்தை சமாதானம் பற்றிக் காட்டப் பட்ட பம்மாத்து அக்கறை கூட இவர் ஆட்சியில் இல்லாது போய்விட்டது.

யுத்த முனைகளில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட தோல்விகளை கட்டுப்பாடற்ற குண்டு வீச்சு, பச்சை இனவாதப் பேச்சுக்கள், நடவடிக்கைகள் மூலம் மறைக்கவும் முயற்சிகள் எடுத்துக் கொண்டார்.
இவரின் இந்த நடவடிக்கைகள் பிரேமதாசா காலத்தில் அரசிடம் சரணாகதியடைந்த தமிழ் இயக்கங்களைக் கூட நிலை குலைய வைத்து விட்டது.

இந்த நிலமைகளிலேயே தனது இனவாதச் சதியின் ஓர் அங்கமாக வடக்கு கிழக்கு மாகணங்களை நிரந்தரமாகப் பிரித்து தமிழர்களின் தாயகக் கோட்பாட்டின் அடித்தளத்தைத் தகர்க்கவும் வெளி நாடுகளில் இலங்கையில் இராணுவத்தின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் அமைதி திரும்பி விட்டது என்ற மாயையை ஏற்படுத்தி அரசிற்குத் தேவையான கடன்களையும் ஆதரவையும் பெறவும் உதவக் கூடிய வகையில் வவுனியா மற்றும் கிழக்குமாகண உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

இந்த முயற்சியில் அரசார்பு இயக்கங்கள் மட்டுமல்ல பொலீஸ் மற்றும் இராணுவம் யாவுமே கலந்து கொண்ட, தில்லு முல்லுகள், பயங்கரவாதம் எல்லாம் நிறைந்த தேர்தலிலும் மக்களின் தீர்ப்பு ஆளும் கட்சிக்குச் சாதகமாக அமையவில்லை. கணிசமான தொகையான மக்கள் இந்தத் தேர்தல்களைப் பகிஷ்கரித்துள்ளார்கள் என்பதையே இத்தேர்தல்கள் காட்டியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட 250,000 வாக்காளர்களில் 75,000 வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. 30,000 வாக்குகள் செல்லுபடியற்றதாகச் செய்யப்பட்டுள்ளன.
திருகோணாமலை நகரசபையில் பதிவுசெய்யப்பட்ட 32,343 வாக்காளர்களில் 14,738 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. திரிகோணாமலை பிரதேச சபையில் பதிவுசெய்யப்பட்ட 17,489 வாக்காளர்களில் 7825 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. அரசாங்கத்தின் கபடத்தனத்தை சரணாகதி இயக்கங்கள் புரிந்து கொள்ளாவிட்டாலும் கணிசாமான தொகையினராகிய மக்கள் புரிந்து கொண்டார்கள் என்பதையே காட்டியது.

ஐக்கியதேசியக்கட்சி இந்தத் தேர்தல்களில் வெற்றியீட்டியதாகப் பிரச்சாரம் செய்தாலும், உண்மையில்

( தொடர்ச்சி : பின் உள் அட்டை )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மழை



சுலாமோகன்

மழை எனக்கு உவப்பானது. சிறுவனாக இருந்த போது மழைக்காகத் தவமிருப்பதும், வானத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டிருப்பதும் ........ இப்படித்தான் நாட்களைக் கழித்தேன். மழை வந்தால் என்னால் வீட்டுக்குள் இருக்க முடியாது. முற்றத்துக்கும் வீதிக்கும் வந்து விடுவேன். வானம் என்னைக் குளிப்பாட்டுகின்றது என்று புளகாங்கிதம் அடைவேன். நிலத்தில் மழை கீறிவிட்ட கவிதைச் சேறுகளைக் கால்களால் வாசிப்பேன். மழையை ஊக்குவிப்பேன்.அது போனதும் வீட்டுக்குள் நுழைய என் காலில் ஒட்டிக்கிடப்பவை கவிதைகள் என்று தெரியாமல் அம்மா பேசுவாள். அவளிற்கு அது சேறு. எனக்கோ அது கவிதை. மிகவும் சோகத்தோடுதான் கிணற்றடிக்குச் சென்று, கால் இடுக்குகளில் பவுத்திரமாக காவிக் கொண்டு வந்த கவிதைகளை அழிப்பேன். இல்லை....கரைப்பேன். கவிதைகள் கரைந்து கவிதைகளாகும். என்னை நேசிப்பதாக சத்தியங்கள் செய்தபடி, கழிநீர் வாய்க்கால் வழியினூடாக பிரிவாற்றாமை தாங்காமல் செல்லும் போது எனக்கு அம்மாவில் கோபம் வரும். அவளைத் திட்டுவேன். என் எதிரி என்றும் கொள்வேன். என்னைக் கவிதைகளிடமிருந்து பிரிக்க முனைபவள் அவள் தான் என்றும் சொல்வேன். என்னோடு வந்து ஏன் அவள் மழையில் குளிக்கவில்லை என்று நான் அடிக்கடி கேட்டுக்கொண்டதுண்டு.

அம்மா மட்டுமல்ல, அப்பாவும் மழைக்கு எதிரி தான். மழை வந்தால் அவர் தனது சைக்கிளைத் தூக்கி சின்ன அறைக்குள் ஒளித்து விடுவார். சேறு பட்டு அதனது கற்புக் கெட்டுவிடும் என்ற பயம் அவரிற்கு.

மழையில் நனைந்து கொண்டிருந்த ஒருநாள் எனக்கு சைக்கிளில் உலாச் செய்ய வேண்டுமென்ற ஆசை வந்தது. சின்ன அறைக்குள் ரகசியமாகச் சென்று சைக்கிளில் கையை வைத்தேன். அதை உருட்டிக் கொண்டு வாசலுக்கு வந்தேன், அங்கே அப்பா பாம்பு போல் படமெடுத்துக் கொண்டு நின்றார், என் மீது அவர் சீறினார். அம்மா வந்து அந்தச் சீறல் மீது தீயை ஊற்றினார். நான், என்னையும் பாம்பாக்க நிர்ப்பந்திக்கப்பட்டேன்.

" எங்கை லாத்து? "

" வாசிகசாலைக்கு . . . . "

சீறலை அதட்டலாக்கி இப்படிச் சொன்னேன்.

" வாசிகசாலைக்கு நடந்து போகலாம்தானே "

இந்த ஆர்குமென்றை வைத்த அப்பா முகத்தில் வெற்றி பெருமிதம் குந்தியிருந்தது. வாசிகசாலை அருகிலிருந்த போதும், அது தூரத்திலிருக்கின்றது என்பதை நியாயிக்க, எனது முகத்தைக் கடுகடுப்பாக்கி இருவரையும் வெருட்டத் தொடங்கினேன். வெற்றி. அவர்கள் பயந்துவிட்டார்கள்.

" எங்கெயெண்டாலும் போ, ஆனா, இருட்டிறதிற்கு முன்னம் வீட்டை வந்து சேர்ந்திடு. "

அம்மாவின் மொழியுடன் அப்பாவிற்கு உடன்பாடில்லாத போதும், என்னுடன் விவாதிப்பதை நிராகரித்துச் சாமியறைக்குள் நுழைந்தார். எனது பாதங்களிற்குக் கிடைத்த லக். அப்பாவின் சைக்களிற்கும் கிடைக்கவேண்டும் என்ற சந்தோஷத்தில், வெளியே விழிகளை விட்டேன். அடைமழை இன்னமும் நிற்கவில்லை. முற்றத்தைக் கடந்து வீதிக்கு வந்தேன்.

அப்பாவினால் துடைத்து பளபளப்பாக இருந்த சைக்கிள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மயர்கள் சேற்றைக் கண்டு மோகித்து அதனுள் தம்மைப் புணர்த்திக் கொண்டன. இது என் மீது உவகையை அள்ளி வீசியது.

மண் மழையால் சேறானது
மழை கவிதை
மழை கவிதை பாடியது
இல்லை, கவிதைகளை
மண்ணில் கொட்டியது.
மண்ணிலிருந்து சேறு
மழையிலிருந்து கவிதை
மழை மண்ணில் எழுதிய கவிதை

மண் – சேறு
சேறு – கவிதை
எது கவிதை?
எல்லாமே கவிதை.

மழை வாரிக் கொட்டிய கவிதைகள் சேற்றுளிருந்து தங்கள் தலைகளை நீட்டிக் கொண்டிருந்தன. மயர்களை அதனுள் தோய்த்திட கவிதைகளை அள்ளிக் கொண்டேன். ஆ! எவ்வளவு கவிதைகள்! வாழ்வின் முகாரிகளும், மோகனங்களும் அதனுள் பதிக்கப்பட்டுக் கிடந்தன.

என் மீது கவிதைகள் கொட்டிக் கொண்டே இருக்கும் போது விழிகளை எல்லாப் பக்கமும் ஓட விட்டேன். வீதிகள் வளைந்தும் நெளிந்தும் கிடந்தன. ஒவ்வொரு வழியும் சூனியமாகப் பட்டது. மழையை எதிர்த்துச். சூனியங்களாமிற்றோ? இந்த சூனியத்துள் கவிதைகளைக் கொண்டு செல்ல வேண்டுமென்ற வெறி எனக்கு. உலாச் செய்ய வேண்டும். எனது அப்பா ஆசையாக வளர்த்துக் கொண்டிருக்கும் சைக்கிளில் உலாச் செய்யவேண்டும். உலா. ஊருலா. வாழ்க மழை. பொழிக கவிதைகள்.

சைக்கிளில் ஏறிய போது, பயம் பிடித்து ஆட்டத் தொடங்கியது. மயர்கள் . . . . மயர்களின் சேறுகள் . . . . சேறுகளின் மீது பாடிய, எழுதிய கவிதைகள். கவிதைகளாகிய சேறுகள் தங்களை மயர்களின் கீறல்களிற்குள் இருத்திக் கொண்டன. சைக்கிளில் சவாரி செய்தால் கவிதைகளின் சுகந்தமான இருப்பு கெட்டுவிடும் . . . . எனக்கு பயம். உடனடியாக இறங்கி, அதனை மிகவும் பதுமமாக உருட்டியபடி சூனியத்தைச் சந்திக்கத் தயாரானேன்.

முதலாவது முடக்கில் திரும்பிய போது, வல்லிபுரக்கிழவன் தான் என் விழிகளில் தட்டுப்பட்டான். கிழவன் என்றால், அவன் தான் கிழவன். எல்லா லட்சணங்களும் அவனிடமிருந்தன. வழமை போல செல்லம்மாக் கிழவியின் வீட்டிற்கு முனனால் நின்று கொண்டிருந்தான். கவிதை அவனைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது.

கிழவன் எப்போதும் இப்படித்தான். அவனது போக்கு எனக்கு ஒருபோதுமே துண்டாக விளங்கவில்லை. ஊருக்குள் நிறையக் கிழவிகளும், வேலிகளும் இருந்த போதும் அவனுக்கோ செல்லம்மாக்கிழவி வீட்டிற்கு முன்னால் கிடந்த வேலி தான் எப்போதும் தேவைப்பட்டது. ஆரம்பத்தில் ஊருக்குள்ளிருந்த அத்தனை கிழவன்களும் வேலிக்குத் தான் படையெடுத்தார்கள். அவர்கள் மசுங்கியபடி கியுவில் நின்றதைப் பல தடவைகள் நான் கணடுள்ளேன். கிழவிக்குத் திட்டத் தெரியும். அகோரம் பொறுக்காமல் அவர்கள் பயந்து வேறு வேலிகளைத் தேடி போய் விட்டார்கள். வல்லிபுரக்கிழவன் மட்டும் விதிவிலக்கு. அவனையும் அவள் பாரபட்சம் இல்லாமல் திட்டுவாள். திட்டும் போது, அசட்டுத்தனமகச் சிரித்துவிட்டு போய்விடுவான். அசடு பூசிய கிழவனின் முகம் மீது எனக்கு எப்போதுமே இரக்கம் ஏற்பட்டதுண்டு. கிழவியின் தலைக்கறுப்புத் தெரியவே இல்லை. கிழவன் அங்கே. அவனோடு பேச வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டபோதும் அதைக் கிள்ளியெறிந்துவிட்டு மிகவும் பதுமமாக சைக்கிளை உருட்டத் தொடங்கினேன்.

நேரம், காலம் தெரியாமல், சூனியத்தையும் மறந்து நடந்து கொண்டிருந்த நான் விழித்த போது, என் கண்களிற்கு கண்ணாமூச்சி காட்டும் கடலின் முன் நின்று கொண்டிருந்தேன். மாலை இருட்டால் கடல் போர்த்தப்பட்டிருந்த போதும், அதனூடு ஒளிந்து கிடந்த மிருதுவான அசைவுகள் வந்து என் காதின் ஓரங்களைத் தட்டிச் சென்றன. அம்மா மீதும் அப்பா மீதும் கொண்டிருந்த கோபம் என்னைப்பார்த்து நக்கலடித்துவிட்டு கடலினுள் குதித்துக் கொண்டதும் மயர்களின் கீறல்களுள் தவிப்புடன் கிடந்த கவிதைகள் கடலுடன் புணரப்படும் எனக் கொட்டிவிட்டு சைக்கிளில் ஏறி றேஸ் செய்யத் தொடங்கினேன். . . . ஓர்மம்.

உலகை அசைக்க வேண்டும் என்ற ஓர்மம். ஓர்மத்தீயைப் பாதங்களாக்கி பெடலை உதைத்தேன். பனி மலை முகட்டிலிருந்து சறுக்கிஸ் விடும் இரும்புப் பந்தை போல சைக்கிள் ஒழுங்கைகளுள் உருளத் தொடங்கியது.

சூனியத்துள் சூனியத்தை மறந்திருந்த போது, என் தலை மீது கவிதைகள் கொட்டிக் கொண்டிருக்கின்றன என்ற பிரக்ஞை வந்தது. சதுப்புள் மயர்களைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தோய்த்து றயர்களை அள்ளிக் கொண்டேன். பின், சைக்கிளை உருட்ட வெளிக்கிட்டு " அதே " முடக்கிற்கு வந்து கொண்டிருந்த போது இப்போதும் அங்கு வல்லிபுரக்கிழவன், அவன் தனது விழிப்பந்துகளை என் மீது திருப்பி, அப்பாவியாகிய பின் தான் நான் வீட்டிற்குப் போனேன்.

❣ ❣ ❣ ❣ ❣

எனக்கு தூக்கம் வந்தது. நன்றாகத் தூங்கினேன். நாட்கள், வாரங்கள், மாதங்கள், ஆண்டுகள் இவைகள் அனைத்தையும் மறந்து தூங்கினேன்.

எனக்கு திகதி தெரியாத நாளில் அப்பா, டிங்கர் சிங்கத்துடன் வந்து என்னை எழுப்பினார்.
" அண்ணையோட போய், டிங்கர் வேலை செய்! "

நான், இன்னொரு பாயை எடுத்து அவருக்கு முன்னே போட்டு விட்டு, " அண்ணை, அகத்தின் அழகு முகத்திலை தெரியும். நீங்கள் நல்லா களைச்சுப் போயிருக்கிறியள், இதில படுங்கோ, படுங்கோ அண்ணை படுங்கோ! "

அப்பா, என் கன்னத்தின் மீது ஒரு "அறை" வைத்துவிட்டு, சிங்கத்துடன் போனார்.

நானோ, பிரக்ஞையை நிராகரித்துவிட்டு தூக்கத்தை தொடர்கதையாக்கினேன்.

❣ ❣ ❣ ❣

இன்று நான் விழித்தேன்.
நானொரு சூனியத்தில் தான் விழித்தேன்.
விழிகளின் முன் சூனிய தரிசனம்.

சூனியன்
சூனியனை நேசித்தேன். சூனியனோடு பேசினேன். சூனியன் என்னைத் தனது சாம்ராஜ்யத்திற்கு அழைத்தான்.

தேதிகள், வாரங்கள், மாதங்கள், ஆண்டுகள் – இவைகள் அனைத்துடனும், என்னை நான் அந்நியமாக்கிவிட்டு சூனிய உலகுள் இறங்கினேன்.
நடந்தேன்.

அதே முடக்கு, அதே வேலி, அதே வல்லிபுரக் கிழவன், வீட்டினுள் கிழவி இருப்பாள். அவள் செல்லம்மாக்கிழவி. சிவப்பி நல்ல சிவப்பி. சிவப்பென்ற சிவப்பி.

கிழவன் அதே இடத்தில். மழை கவிதை. மழை சந்தனம். மழை அவனது மன அசுத்தத்தையும் கவிதையாக்கியது.

கிழவனின் விழிகள், புதையல் தேடும் விருப்பில் வேலியின் கிடுசல் கபாடங்களிற்கூடாக உள்ளிட்டன. நான் அவன் மீது அப்படியே ஆடாமல் அசையாமல் என்னை வைத்திருந்தேன். அவனது உலகமும், அவன் தனக்குத் தெரியாமல் கீறிய உலகமும், உலகம், கிழவன், நான், மழை, கவிதை, சேறு, கிழவி . . . . அடைமழை அடங்கியது. இப்போது தூறல்கள். நான் தூரத்தில்........ நான் அவன் மீது........ வேலிக்கு முன் அவன். வீட்டிற்குள் அவள்? இவள் வெளியே வந்தால் அவ்வளவுதான். அதனுள் என்னைப் புதைக்க, நான் என்னைத் தயாராக்கிக் கொண்டேன். டிக், டிக், டிக் நேரம் போய்க்கொண்டிருந்தது. கிழவனின் விழிகளுள் துருதுருப்பு. ஏன்?
சூனியத்தைத் தூறல் மங்கியபோது அடைமழை மீண்டும் வந்து, எனது பாதங்களின் கீழ் மோகனக் கிக்கிளி செய்தது. நான் சூனியத்தைத் தேட வெளிக்கிட்டேன். கிழவியின் தலை தான் தெரிந்தது. கிழவி நல்ல சிவப்பி. கூந்தல் முழுதும் வெள்ளிகள் விதைக்கப்பட்டிருந்தன. வெள்ளிகள் தூங்கிக் கொண்டிருந்தன.

கிழவி வாசலுக்கு வந்தாள். கிழவன் அசையவுமில்லை, தன்னியக்கத்தை ஒழிக்கவுமில்லை. பயமேயில்லாத அசட்டுக்கிழவன்.
கிழவியின் கையினில் துவாய் இருந்தது.
அவள் கிழவனுக்கு முன் வந்தாள்.
திட்டினாள்.
" ஏனடா உந்த மழையுக்க நிண்டு நனைஞ்சு கொண்டிருக்கிறாய்? உள்ளுக்கை வந்து முதல்லை, தலையைத் துடை. "
கிழவன் அசடு. அசட்டைத் துடைத்தபடி அவன் உள்ளே நுழைந்தான் கிழவியுடன்.
தூறலும், அடைமழையும் தங்களைக் கிழவனுடன் கோர்த்த சென்ற போது, எனக்கு முன் சூனியம் மறைந்தது.

(நன்றி: வீரகேசரி)

www.tamilarangam.net

# பட்டதைத் சொல்வேன்

## காளமேகம்

1980ம் ஆண்டு Thomas Keneally என்ற ஆஸ்திரேலிய எழுத்தாளர் Beverly Hills இல் உள்ள ஒரு கடையில் தோற்கைப்பை ஒன்று வாங்குவதற்கு சென்றார். அந்தக் கடையின் சொந்தக்காரர் Leopold Pfefferberg என்ற யூதர். அவருடன் பேச்சுக் கொடுத்த Thomas Keneally, கிட்லரின் நாசி ஆட்சி காலத்தில் போலந்தில் வாழ்ந்த அந்த யூதர், எவ்வாறு மயிரிழையில் உயிர் தப்பினார் என்ற வரலாற்றைப் பற்றிக் கேள்விப்பட்டார்.

ஒரு தொழிற்சாலைச் சொந்தக்காரனும், கறுப்பு மார்கட்காரன், மதுப்பிரியன், ஸ்திரி லோலன், ............... என்றெல்லாம் பேரெடுத்த Oskar Schindler என்ற ஜேர்மானியனால் காப்பாற்றப்பட்ட பல நூற்றுக் கணக்கான யூதர்களில் Leopold Pfefferberg ம் ஒருவன்.

Oskar Schindler இன் வாழ்க்கை பற்றிய மற்றைய ஆய்வுகள், காப்பாற்றப் பட்ட பல யூதர்களின் பேட்டிகள், Schindler இன் நண்பர்கள் கொடுத்த தகவல்கள் ஆகியவற்றைக் கொண்டு Thomas Keneally, ***SCHINDLER'S ARK*** என்ற நாவலை எழுதினார்.

இந்த நாவல் Steven Spiel berg இன் நெறிப்படுத்தலில் ***SCHINDLER'S LIST*** (ஷின்ட்லரின் பட்டியல்) என்ற நல்லதொரு திரைப்படமாக உருவாகியுள்ளது. இந்த வருடத்திற்கான சிறந்த திரைப் படம், சிறந்த நெறிப்படுத்தல்களுக்கான "ஒஸ்காரு"களைப் பெற்றுள்ள இந்தத் திரைப் படம், பாசிசத்தின் – நாசி ஆட்சியாளர்களின் கொடுமைகளை தற்கால சந்ததியினருக்கு நேரடியாகக் கொண்டுவரும் சமீபகால சித்திரமாக அமைந்துள்ளது.

தனது சுய இலாபத்திற்காக, தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு யூதர்களை விடுவிக்கும் ஷின்ட்லர் !

மது, மாது, சுகபோகங்கள் ............. இத்தியாதியில் மகிழும் ஷின்டலர் ...........!!

தலைமயிர்கள் கத்தரிக்கப்பட்டு, குளிப்பதற்கென்று "நச்சு வாயு" வரும் குளியலறைக்கு அனுப்பப்படும் பெண்களை இலஞ்சம் கொடுத்து மீட்டு,

இறுதியில் இன்னும் கொஞ்சம் பணம் இருந்திருந்தால் இன்னும் சில உயிர்களை மீட்டிருப்பேனே என்று அழும் போது அவனது பாவங்கள் கழுவப்பட்டுத்தான் விடுகின்றன.

அவனால் மீட்கப்பட்ட யூதர்கள் அவனின் சமாதியில் ஞாபகமாக சிறு கற்களை வைக்கும் போது அது ஒரு பாவியின் சமாதியல்ல, ஒரு மீட்பனின் சமாதியாகவே அது இருக்கின்றது.

படத்தில் சில கட்டங்கள்:

– ஸ்ரீலங்கா இராணுவத்தினால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யபடும் மக்களையும் ...............

– யாழ்ப்பாணத்தில் மைதானத்தில் ஒன்று கூட்டப்பட்ட முஸ்லீம் மக்கள், நகைகள் உடமைகள் பறிக்கப்பட்டு, 24 மணித்தியாலத்தில் வெளியேற்றப்பட்ட நிகழ்வுகளையும்

மனக்கண் முன் கொண்டு வருகின்றன..

பார்க்க வேண்டிய படம்.

சுவிற்சலாந்தில் 18வது இலக்கியச்சந்திப்பு ஏப்பிரல் 2 – 3 திகதிகளில் நடைபெறவுள்ளது. ஜேர்மனியில் மட்டுமே முடங்கி விடாமல் பிரான்ஸ், ஒல்லாந்து, இப்போது சுவிற்சலாந்து என்று ஐரோப்பியச் சந்திப்பாகத் தொடர்வது வளர்ச்சிதான்.

ஒல்லாந்து இலக்கியச்சந்திப்புப்பற்றி சில குறிப்புக்கள் எழுத விரும்பியும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ( தற்பொழுதும் சில குறிப்புக்களை பிற்போட்டுள்ளேன். பிறிதொரு சமயம் பார்ப்போம். )

ஒல்லாந்து இலக்கியச்சந்திப்பின் சிறப்பம்சமாய் அமைந்தது இலண்டன் அவைகாற்றுகழகத்தினரின் "மழை" நாடகமும், கவிதா நிகழ்வும் இசை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிகழ்ச்சிகளும் என்றால் மிகையாகாது. சத்தியமூர்த்தியின் " ஓ வண்டிக்காரா " எல்லோர் காதுகளிலும் ரீங்காரமிட்டுக் கொண்டுதான் இருந்தது. ஆனால் சில நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தியவர்கள் பந்தைய வண்டில்காரர்களைப் போல அவசரப்பட்டு விவாதங்களுக்கும் கேள்விகளுக்கும் நேரங்களைக் குறைத்துக் கொண்டது பலருக்கு கசப்பாக இருந்தது.

பிரேமன் 17வது இலக்கியச்சந்திப்பைப் பற்றி "ஓசை"யில் திரு.சபாலிங்கம் எழுதியவை பற்றிச் சில குறிப்புக்கள்:
17வது இலக்கியச்சந்திப்புக்கு வழமையாக வருகை தருபவர்கள் வரவில்லை என்று அவர் குறிப்பிட்டது தவறாகும். மாறாக பிரேமன் இலக்கியச் சந்திப்புக்கு வருகை தந்தவர்களில் 85 வீதமானோர் வழமையாக கடந்த சந்திப்புக்களுக்கு வருகை தந்தவர்கள் ஆவார்கள்.

தாம் இலக்கியச்சந்திப்பில் "நிகழ்ச்சி" நடத்தினால்தான் வருகை தருபவர்களையும், அழைப்பு விடுத்துப் பிரயாணச் செலவு கொடுத்தால் மட்டும் வருபவர்களையும் "வழமையாக வருபவர்கள்" பட்டியலில் திரு.சபாலிங்கம் சேர்த்து விட்டார் போலும். இந்தப் பிரமுகர்கள் விருந்தாளிகள் தான்.

அடுத்து '*சிந்தனை*' யில் இலக்கியச்சந்திப்புப் பற்றி நடைபெற்ற விவாதத்தில் பாரதிதாசன் எழுதிய சில சம்பந்தா சம்பந்தமற்ற பகுதிகளை சேர்த்து எழுதி திரு.சபாலிங்கம் கருத்துச் சொல்ல முனைந்துள்ளார். ஆனால் திரு. பாரதிதாசனே தனது கருத்துக்கள் தவறு எனக் கடிதம் எழுதியுள்ளார்.

யார் யாரோ எதுவும் சொல்லுவார்கள். எழுதுவார்கள்.
கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் என்பார்கள்.
எமக்கெனச் சுயமான கருத்துக்கள் தேவை.
இது பாரதிதாசனுக்கும் பொருந்தும்.

பிரேமன் இலக்கியச்சந்திப்பில் வாசகர் விமர்சன நேரத்தில் சுசீந்திரனின் கேள்வியினால் உருவான விவாதம் தேவையற்றது, கசப்பானது என்பது சிலருடைய விவாதம்.

"குசு குசு " கூட்டங்கள் வேண்டாம். திறந்த விவாதங்கள் வேண்டும் என்பது எனது வாதம்.

பகிரங்க மன்னிப்பு

சிந்தனை *3/93* இல் எனது " இலக்கியச் சந்திப்பு " பற்றிய மடலில் " நான் சொல்வது தான் காவியம் எனும் சிறு சிறு கைலாசபதிகள், சிவத்தம்பிகள் . . . " என எழுதியிருந்தேன். எனது இந்த மதிப்பீடு எவ்வளவு பிழையானது என்பது எனது மடல் 'சிந்தனை'யில் வெளிவந்த பின்புதான் எனக்குத் தெரியவந்தது.

கைலாசபதி, சிவத்தம்பி குறிப்பாக கைலாசபதி அவர்கள் தமிழ் இலக்கிய உலகிற்கு ஆற்றிய சேவைகள் மிக மகத்தானவை. இவர் பலரால் தமிழ் இலக்கிய விமர்சனத்தின் மைலகல்லாகவும், தமிழ்விமர்சன முறையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவராகவும் கூறப்படுகின்றார்.

இவர்கள் பற்றிய மதிப்பீடு சிலரின் வாய்மூலமாகக் கேள்விப்பட்டதை வைத்து எழுந்ததே. ஆராயாமல், மற்றவர்களின், ஒரு சிலரின் அபிப்பிராயத்தை வைத்து எனது அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொண்டதன் பிழையை உணர்கின்றேன்.

எனது நேர்மையற்ற இந்த விமரசன முறைக்காக வாசகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

பாரதிதாசன்

பி.கு. எனது தவற்றை நண்பர் சுசீந்திரனும் சுட்டிக் காட்டியிருந்தார். அவருக்கும் நன்றி.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனவாதத்தின் தோற்றமும் அதன் விளைவுகளும்
## Entstehung des Rassismus und seine Folgen
## *The emergence of racism and its consequences*
## Les origines du racisme et ce qui en decoule

**நாசி ஜேர்மனியில் யூதர்கள் எப்படி நடந்தார்களோ அப்படி இந்தியாவில் இந்திய முஸ்லிம்கள் நடப்பார்களேயாயின் அவர்களுக்கும் அதேகதியே !** – TIMES MAGAZINE இற்கு தை 1993ல் இவ்வசனங்களைக் கூறியவர் சிவசேனையின் தலைவர் பால் தக்காரி

**ஆபிரகாம் தனது மகன் இசாக்கிற்கு தான் வாழ்ந்த நாட்டில் பெண்தேடாது தனது சொந்தநாடான சல்டேயாவில் பெண் தேடுவித்தான். அவள்தான் ரிபெக்கா. கடவுள் ஒவ்வொரு இனத்தையும் அதன் அழகுகளோடு படைத்திருக்கின்றார். இவ்வினங்கள் கலப்பதை அவர் விரும்பவில்லை. இனங்கள் கலக்காமல் இருப்பதும் கலக்கவிடாமல் பார்ப்பதும் கிறிஸ்தவர் கடமை. கறுப்பு அமெரிக்க இராணுவத்தினருக்குப் பிறந்த பிள்ளைகளைப் பார்க்கும்போது எனக்கு வேதனையாக இருக்கும். நான் ஜேர்மன் பிள்ளைகளுக்கு சமயம் படிப்பிற்கும்போது இனங்கள் கலப்பது நாங்கள் கடவுளுக்குச்செய்யும் துரோகம் என்று சொல்வேன்.** – இவை ஒரு தமிழனும் ஒரு ஜேர்மன்போதகரின் மகளும் ஒருவரையொருவர் விரும்பி கல்யாணம்செய்யவிழைந்தபோது தந்தை பாதிரியார் சொன்ன வசனங்கள்.

**சோனிகள் தொப்பி பிரட்டிகள்.** – சராசரி தமிழ்மகன் 'சோனியையும் தொப்பியையும்' தெரியமுன்னர் கேட்கும் வசனம்.

**சிங்களவனின் தோலில் நாங்கள் செருப்புத்தைத்துப்போடுவோம்.** – நாங்கள் கைதட்ட 'அமிர்' இன் மங்கையற்கரசி சொன்ன வசனம்.

**பறத்தமிழனை விரட்டி பாக்குநீரிணைக்குள் தள்ளுவோம்** – சிறில் மத்யுக்கள் சொன்ன வசனம்.
**கள்ளத்தோணிகளை விரட்டி இந்தியாவிற்கு அனுப்புவோம்.** – இது ஒரு பௌத்தபிக்குவின்வசனம்.

Steckt sie in den Kerker அவர்களை பாதாளச்சிறைகளில் அடைத்துவிடு
oder steckt sie ins KZ அல்லது அவர்களை concentration camp ல் அடை
von mir aus in die Wueste என்னைப்பொறுத்தவரையில் அது பாலைவனமாகவும் இருக்கலாம்.
aber schickt sie endlich weg ஆனால் அவர்களை எப்படியோ வெளியேற்று
Toetet ihre Kinder, schaendet ihre Frauen அவர்கள் பிள்ளைகளைக் கொல், பெண்களை அவமானப்
vernichtet ihre Rasse ! -படுத்து, அவர்கள் இனத்தை அழி !

-" ENDSIEG " என்ற பெயருடைய Nuernberg நகரத்தைச் சேர்ந்த skinheadband அதாவது நியோநாசிமொட்டைத்தலைகள்பாட்டுக்குழு வெளிநாட்டவரை ஜேர்மனியிலிருந்து வெளியேறும்படி படித்த, படிக்கும் பாட்டின் சில வசனங்கள்.

**ஆரியப்பெண்ணொருத்தி ஆடவந்தாள். அவள் தமிழ்மகள் பிள்ளைகளைக் கொல்லவந்தாள். அவள் புலிகளின் கரங்களில் உயிரிழப்பாள்.** – 1993ல் புலிகளின் ஆதரவாளர்களால் பேர்லின் நகரத்தில் நடாத்தப் பட்ட பன்னுலகத்தமிழ்மாநாட்டில் ஒரு ' கர்நாடகசங்கீத ' குழுவின் வசனங்கள்.

இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமே எமது இனவாதத்திற்கெதிரான போராட்டம் இனவாதமற்று இருக்கவேண்டும் என்பதேயொழிய உலகத்தை நல்லது கெட்டது என இரண்டாகப் பிரிப்பது அல்ல
வசனமுடிவுகளில் குறிப்பிடப்பட்ட இலக்கங்கள் கட்டுரையின் முடிவிலுள்ள நூல்களின் பட்டியலின் இலக்கத்தைக் குறிக்கும்.


த. வாசுதேவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்குறிப்பிட்ட வசனநடைகளில் சில வித்தியாசங்கள் தென்பட்டாலும் இவற்றில் எது கூடியஇனவாதத்தைக் கொண்டது என்ற விவாதம் ஒருதெளிவான, ஆரோக் கியமான அரசியல் நோக்கத்தைக்கொண்ட இனவாத மற்ற ஒருவருக்கோ அல்லது ஒரு சமுதாயத்திற்கோ இருக்காது.



உலகச்சரித்திரத்தில் நடந்த இனவாதக் கொலைகளுக் கு கணக்கில்லை. கொலைகாரர்களில் அன்று ஐரோ ப்பியர் மிகமுக்கியத்துவம் வகித்தனர். உதாரணமாக மத்திய தென் அமெரிக்க நாடுகளில் மட்டும் ஸ்பானிய வம்சத்தினர் தேவாலயங்கள், சமயபரப்பாளர்(missionary உதவியுடன் மெக்சிக்கோ நாட்டின் ஒருபகுதியில் மட்டும் 1532–1608 ஆண்டுகளுக்கிடையில் தமது இனவொழிப்பு நடவடிக்கைகளினால் 168 இலட்சமாக இருந்த ' சிவப்பு இந்தியரை ' 11 இலட்சத்திற்குக் குறைத்தனர் (1). நாசி ஜேர்மனி பாசிச, இனவாத க்கொள்கைகளினால் யூதர், சிந்தி, ரோமா போன்ற இனங்களையும் இடதுசாரிகள் போன்ற அரசியல்வாதி களையும் ஊனமடைந்தவர்கள், மனநோயாளிகள் போன்றோரையும் தன்னினச்சேர்க்கை (homosexual) யாளர்களையும் கொடூரமான முறைகளில் அழித்து ஒரு ' தேகநலத்தைக்கொண்ட ' , ' வெள்ளைநிற ', ஐரோப்பிய–ஆரிய, ஜேர்மன் மக்களை மையமாகக் கொண்ட சமுதாயத்தை உருவாக்க முனைந்தது நாமனைவரும் அறிந்ததே.

இரண்டாவது மகாயுத்தம் முடிவடைந்தபின்னர் யுத்த காலங்களில் நடந்த கொடுமைகளை அவதானித்த சில புத்திஜீவிகள், சமூகநலவாதிகள் மனிதஉரிமையின் வரைவிலக்கண வெறுமையை உணர்ந்தனர். அதன் பிரதிபலிப்பாகவே இவர்களின் முயற்சிகளாலும் சில விளம்பரம்விரும்பிய, போரில்வெற்றியடைந்த நாடுகளின் உதவியாலும் 1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை (UNO) உருவாகி மனிதன், மனித உரிமைகள் போன்ற பதங்களுக்கு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டு சர்வதேசமயமாக்கப்பட்டன.

## எமது இனவாதமும் விடுதலைப்போராட்டமும்

வேதங்கள், இதிகாசங்கள், குறள்கள், பைபிள்கள், மகாவம்சங்கள், குர் ஆன்கள் வலியுறுத்த முயற்சி செய்து தோல்வியடைந்த மனித உரிமைகள் 1948 இற்குப்பின்னரும் எமது சமுதாயத்தை அடையவில்லை. மாறாக ஒற்றுமையை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட சமயங்களை வேற்றுமையை நிலைநாட்டவே நாம் பாவித்தோம். எமது உயர்வு மனப்பான்மைக்கு காலனித்துவம் உதவியது.

எந்த மனிதனும் எந்த சாதி, சமய, இனத்தில் பிறக்க வேண்டுமென்பதை முடிவுசெய்யமுடியாது என்பதை மறந்து நாம் பிறந்த சாதி, சமய, இனவாதங்களைப் பாவித்து மாற்றானை இழிவுசெய்தோம். சிறுபான்மை யான ஆங்கிலேயர் தமது பாதுகாப்புக்கருதி சிறுபான்மையான எம்மில் சிலருக்கு ' உயர்ந்த ' பதவிகள் என சமுதாயத்தில் கணிக்கப்படும் பதவிகளை வழங்கியபோது தமிழினத்தின் திறமைக்கு அவன் தந்த பரிசாகவே அதைப்புரிந்துகொண்டோம். இப்படி உயர்ந்த பதவிகளில் இருந்தவர்கள் தமது சந்ததி முன்னேறுவதற்கு வழிவகுத்தது மட்டுமன்றி இவ்வாறான முறைகளில் யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய வர்க்கத்தையும் உருவாக்கினர்.

மனிதகுலத்தின் பிற்போக்குத்தனத்தின்சான்றாக விளங்கும் சாதிஅமைப்பில் அறுபது விகிதம் 'உயர்ந்தசாதி' என்று அழைக்கப் படும் தாழ்த்துபவர்களையும் நாற்பது விகிதம் ' தாழ்ந்தசாதி' என்றழைக்கப்படும் தாழ்த்தப்படுபவர்க ளையும் கொண்ட இலங்கைத்தமிழர் மத்தியில் தாழ்த்தப்படுபவர்களின் உரிமைகள் விவாதத்திற்கு இருக்கவில்லை. பெண்களின் உரிமைகள் விவாதம் செய்யப்படவில்லை. ' வடக்கத்தையான் ' தமிழன் என்ற உணர்வோ அல்லது ' சோனிகளும் ' தமிழர் என்ற உணர்வோ கனவிலும் இருக்கவில்லை. இன்றுநாம் ஒடுக்கப்படும்மக்கள் என்ற அங்கீகரிப்பிற்கு குறிப்பீடுகளாகக் காட்டும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை நாம் எமது மக்கள் மத்தியில் பயன்படுத்தியிருக்கின்றோமா என்ற கேள்விக்கு பதில் சொல்வது மனச்சாட்சியுள்ளவர்களுக்குக் கடினம்.

சுதந்திர இலங்கையின் அதிகாரம் கைமாறியபோது இலங்கைப்பேரினவாத அரசின் இனவாதச்சட்டம் எம்மில் முக்கியமான சிலரை பாதித்து அவர்களின் நலம்கருதி அமைக்கப்பட்ட சமூக சீர்திருத்தமற்ற போராட்டம் இன்று தமிழ்மக்கள் ஒருகாலத்தில் நாகரிகமடைந்த சமுதாயங்களில் ஒருவராக இருந்தார் களென்பதை மறுப்பதாக விளங்குகின்றது. இன்று இலங்கைஅரசின் பேரினவாதத்திலோ அல்லது எமது சுயநிர்ணய கோரிக்கையிலோ எம்மினத்திற்கு சந்தேகம் இல்லையெனினும் அதனையணுகும் முறைகளிலேயே எம்மினம் துருவப்படுத்தப்பட்டுள்ளது.

ஒடுக்கப்படும் ஒரு இனத்தின் தேசியவாதம் முற்போக்கானது என்று கருதி அதன் அடிப்படையில் ஒருசமுதாயம் போராடுவதன் விளைவிற்கு நாங்கள், யூதர் போன்றோர் நடமாடும் உதாரணங்கள். ஒரு காலத்தில் போராடும் எமது விகிதத்தை அதிகரிப்ப தற்காக ' தமிழ்பேசும் மக்கள் ' என்று முஸ்லிம்களை அழைத்த நாம் இன்று அவர்களின் பாரம்பரியபூமியின் உரிமையை மறுத்து வடக்கிலிருந்து அவர்களை விரட்டி, சிங்கள பேரினவாதத்திலிருந்து தமிழ்ப்பேரின வாதம் எவ்விதத்திலும் வித்தியாசப்படவில்லை என்று உலகிற்குக் காட்டியுள்ளோம். இதனைச்செய்தது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம்மால் தெரிவுசெய்யப்படாமல் எம்மைப்பிரதிநிதித்து வப்படுத்துபவர்களாக இருக்கலாம். ஆனால் இந்தப் புலிகளை ஆதரிக்கும் எவருக்கும் இச்சாதனையில் சரித்திரப்பங்குண்டு.

அதுமட்டுமல்ல, இன்று இலங்கையின் தெற்கில் பல நூற்றுக்கணக்கான எம்மிளைஞர்களும் யுவதிகளும் அரசபடைகளினால் கைதுசெய்யப்படும்வேளையில், துணுக்காய், சாவகச்சேரி, கச்சாய், கோப்பாய் மற்றும் பிரவுண் றோட் சிறைகளில் 4000 இற்குமேட்பட்டோர் பழைய த.வி. கூட்டணியினர், பல்கலைக்கழகமாணவ மாணவிகள், மாற்று இயக்கத்திலிருந்தவர்கள், இயக்க ங்களிலிருந்து விலகி வெளிநாடுசெல்லாது ஊரில் ஒதுங்கிவாழ்ந்தவர்கள், சமூகநலவாதிகள் என்பதற்காக சித்திரவதைசெய்யப்பட்டு கொல்லப்படும்போது(2), மக்கள் வாய்பேசமுடியாது பாதுகாப்பின்றி கிடங்குகளி ல் தமது அன்றாட வாழ்க்கையை நடத்தும்வேளை யில் குழந்தைகள் மூளைச்சலவைசெய்யப்பட்டு 'விடுதலை' என்றபெயரில் யுத்தமுனைக்கு இரையிடப் படும்வேளையில் ' டம் ' பண்ணாமல் இயக்கம் நடத்தமுடியாது என தமிழ்த்தலைவர்கள் ஏகோபித்த தீர்மானங்கள் எடுத்திருக்கும் இந்த இருபதாவது நூற்றாண்டில் எமது இற்றைவரையான 'விடுதலைப் போராட்டத்தை' மீளாய்வுசெய்து எமது உண்மையா ன எதிரி யார் என்று சிந்திப்பதே நாமனைவரும் எம்மினத்திற்கு செய்யும் பணியாக ஒருகாலத்தில் கருதப்படும். விடுதலையடைந்த பின்னர் ஜனநாயகம் வரும் என நினைப்பவர்கள் இந்த நாயகர்களின் Killing Field கள் கண்டுபிடிக்கும்வரை மௌனமாக இருப்பதற்கு மாத்தையாக்கள் எச்சரிக்கையாக இருப்பார்களா ?

## தமிழ் அகதிகள்

இலங்கையிலுள்ள அகதிகள்தொகை கணக்கிலடங்கா. உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி துன்பப் படும் இந்தியாவிலுள்ள தமிழ்அகதிகள் எமது பழைய சோழர்பரம்பரையினரின் அரசியல்சதுரங்கத்தின் காய்கள். இன்று ஐரோப்பா, வட அமெரிக்கா போவதற்காக மொஸ்கோவில் மட்டும் பதினோராயிரம் தமிழ்மக்கள் ஏஜண்டுகளின் கைகளில் சிக்குண்டு தவிக்கின்றனர். இன்று தமிழ்அகதிகள் இல்லாத நாடு உலகத்தில் இல்லை. சென்றகிழமை டென்மார்க்கடல்படையினர் தமக்குரிய கடல்பிராந்தியத்தில் அரைஉயிருடன் 36 தமிழர்களை ஒரு படகில் கண்டெடுத்தனர். எந்தக் கப்பல் இவர்களை நடுக்கடலில் இறக்கியது என்பதை ஏஜென்டைவிட ஒருவருக்கும் தெரியாது. முன்னாள் கிழக்குஜேர்மனியில் தமிழ்அகதிகள் நியோ நாசிகளுக்குப் பயந்து தமது முகாமைவிட்டு எங்கும் போவதில்லை. மேற்குஜேர்மனியில் எப்போதுநாங்கள் என்று தம்மை எரிப்பவர்களை எதிர்பார்த்தபடி இருக் கின்றார்கள். மற்றைய மேற்கத்தியநாடுகளிலும் இனவா தம் நாளுக்குநாள் வளர்ச்சியடைகின்றது.

ஜேர்மனியின் எல்லைகளுக்குள் அகதிகளை களவாகக் கொண்டுவருபவர்கள் வாங்கும் தொகை கணக்கில் அடங்காது. ஒளித்துக்கொண்டுவரும் இடங்களில் இறைச்சிப்புடைபெயர்ப்பு வாகனம், சீமெந்துக்கலவை வாகனம் போன்றவை அடங்கும். இதுவரை இந்த முறைகளினால் உயிரிழந்தவர்கள் நூற்றுக்கு மேல்.அங்கு கடைகளுக்குப்போவதை மானபங்கமாகக் கருதிய பெண்களில் பலர் ஏஜண்டுகளின் இச்சைக்கு ஆளாகியுள்ளனர். இவ்வளவு பாடுபட்டுத்தேடிய புகலிடமும் நரகத்தையே நினைவூட்டுகின்றது. அங்கு மாற்றான் மொழியைப் படிக்காத நாம் இன்று இங்கு மாற்றான் மொழியைப் படிப்பதை தரம்கூடியதாகக் கருதுகின்றோம். மரபுவழிவந்த தமிழ்மக்கள் என்று சொல்லி இலங்கைத்தோட்டத்தொழிலாளர்பிரச்சனையை வேறு பிரச்சனையாகக்கருதிய நாம் இன்று அந்நிய பிரஜாவுரிமையை பெருமையாகக் கருதுகின்றோம்.

## எமது சிந்தனை

இப்படி சொந்தமண்ணில் ஒடுக்குபவர்களாகவும் ஒடுக்கப்படுபவர்களாகவும் வாழ்ந்தநாம் இன்று அந்நிய தேசங்களில் அரசியல்தஞ்சங்கோரியவர்களாக அன்றாட வாழ்க்கையில் இனவாதத்தை எதிர்நோக்கு கையில் மனம் புண்படுகின்றது. லண்டனில் subway இலோ பாரிஸில் metro இலோ அல்லது பேர்லினில் U-Bahn இலோ நாங்கள் உட்கார்ந்திருக் கும்வேளைகளில் வெள்ளையர்கள் எமக்குப்பக்கத்தில் இடமிருந்தும் உட்காராமல் சுமையான பைகளுடன் நிற்கும்போது எமக்கு கோபமும் வேதனையும் மனச் சங்கடமும் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலை களிலாவது ஒருஇனத்தில் பிறந்து, ஒருமொழிபேசி, ஒருசமயத்தைப்பேணியிருந்தும் எமது சாதிவெறியால் குறிப்பிட்டமக்களை கடவுள்சந்நிதானத்தில் அனுமதிக் கமறுத்த எமதுமனப்பான்மையை மீளாய்வுசெய்வதே ஐரோப்பியரின் இனவாதத்தை எதிர்த்துப்போராட நாம் எடுக்கும் முதற்கட்டம்.




ஐரோப்பிய இனவாதம் சமுதாயத்தின் பலவர்க்கங்களில் பரவலாகக்காணப்பட்டாலும் பல கட்சிகளில் தென்பட் டாலும் இதனை நேரடியாக ஐரோப்பிய வலதுசாரிகள் தமது அரசியல்கொள்கையாக சுவீகரித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஐரோப்பிய வலதுசாரிகள்

வலதுசாரித்தனம் என்றால் என்ன என்ற கேள்விக்கு வரைவிலக்கணம் கொடுப்பது கடினமாகவிருந்தாலும் வலதுசாரிகளின் அடிப்படைத்தத்துவம் என்னவென்பதை வரையறை செய்வது எளிது.

**ஒரு இனத்தின் உயிரின ரீதியான மரபுவழியை அடிப்படையாகக்கொண்டு இயங்கும் தேசிய இனவாதிகள் தமது இத்தகைய வலதுசாரித்தனத்தினால் மனித உரிமைகளை ( சுதந்திரம், சமத்துவம், சமூக உரிமை ) உதாசீனம் செய்வதோடு ஒரு சர்வாதிகாரஅடிப்படையிலான தம்மினத்தைக்கொண்ட அரசை அமைக்க முற்படுவார்கள். இத்தகைய குணாதிசயங்களினால் இவர்கள் ஜனநாயகத்தின் எதிரிகளாக விளங்குவதோடு சிறுபான்மைகளின் அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்க மறுப்பவர்களாகவும் விளங்குவர்.**

இதன்படி இன்று உயிரினரீதியான மரபுவழியைஅடிப்படையாகக்கொண்ட இனமென்றால் ஜேர்மன்இனம் நீலக்கண்களையும் தங்கநிறமுடியையும் ஜேர்மன் மொழியையும் பரம்பரையாகக்கொண்டவர்களேயாவர் என்பதும் ஜேர்மனியில் வாழும் மற்றைய இனத்தவருக்கு ஜேர்மன்மக்களுக்குரிய உரிமைகள் எதுவும் இருக்காதென்பதும்கருத்து. இன்னொரு வாக்கியத்தில் சொல்லப்போனால் இன்று ஜேர்மனிபோன்ற தொழிற்துறைநாடுகளில் நிலவும் வேலையில்லாத்திண்டாட்டம், வீட்டுப்பற்றாக்குறை போன்ற பிரச்சனைகளை இங்குவசிக்கும் வெளிநாட்டவர்களை வெளியேற்றுவதன்மூலம் தீர்க்கமுடியும்.





இப்படிப்பட்ட விவாதங்களை நாம் தினந்தோறும் ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, பெல்ஜியம், சுவிற்சலாந்து, ஐக்கிய இராச்சியம் (UK), டென்மார்க்....... போன்ற நாடுகளின் அரசகட்சிகளிடமிருந்து மறைமுகமாகவும் வலதுசாரி எதிர்க்கட்சிகளிடமிருந்து நேரடியாகவும் கேட்கின்றோம். தேர்தல் பிரச்சாரத்தின் போது இக்கூற்றுகளை ஆளையாள் போட்டிபோட்டுக் கொண்டு மின்கம்பங்கள் தவறவிடாமல் கொட்டை எழுத்துக்களில் கட்சிகள் ஒட்டுகின்றன. கடந்த இரு புதுவருடங்களில் கட்சிகளின் சுலோகங்களை ஆராய்ந்துபார்த்தால் ஆரம்பத்தில் வலதுசாரிகளால் தேர்தலுக் குவைக்கப்பட்ட சுலோகங்கள் அனைத்தையும் இன்று கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சிகள் (christian democrates, conservatives ), சமூகஜனநாயகக்கட்சிகள் ( social democrates ), முற்போக்குக்கட்சியினர் (liberals) போன்றோர் வலதுசாரிமக்களின் வாக்குகளை இழக்கப்பயந்து இவ்வினவாதச்சுலோகங்களை சுவீகரித்துக்கொண்டது தெரியும்.

## இனவாதத்தின் தோற்றம்

ஐரோப்பாவைப்பொறுத்தளவில் கிரேக்க உரோமசாம்ராச்சியங்களில் பலஇலட்சக்கணக்கான அடிமைகள் இருந்தார்கள். ஆனால் இவ்வடிமைகள் ஒரு குறிப்பிட்ட நிறத்தையோ இனத்தையோ அல்லது மொழியையோ கொண்டிருக்கவில்லை. ஒரு சாம்ராச்சியம் ஒருநாட்டைக்கைப்பற்றியபோது அந்நாட்டவரில் பலர் அடிமைப்படுத்தப்பட்டனர். இதில் பலநிறங்களும் இருந்தன. அடிமைத்தனத்தைப்பற்றிப்பேசும்போது பழையகாலங்களில் அதுஇருந்ததென்றும் இன்றுகூட ஆசிய, ஆபிரிக்க, மேற்கிந்தியநாடுகளில் நேரடியான அல்லது மறைமுகமான அடிமைத்தனம் இருக்கின்றதென்றும் (3) ஐரோப்பியர் எமது குரலை அடக்கக் கூறக்கூடும். காரணம் இவர்களால் சாதுவாக்கப்பட்ட தமது அடிமைத்தனம் ஐரோப்பியரையும் ஐரோப்பியரைக்கொண்ட வடஅமெரிக்காவையும் மீளமுடியாத ஒரு பொருளாதார ஏகாதிபத்தியமாக்கிவிட்டதுமட்டுமன்றி இந்த மாபெரும் குற்றத்தில் கிறிஸ்தவதேவாலயங்கள், கிறிஸ்தவ சபைகள், சமயபரப்பாளர்கள்(missionaries) மிகமுக்கியபங்கு வகித்ததினாலாகும்.

இதில் சமயவாதிகளின் பங்கிற்கு பலகாரணங்கள் உண்டு. பைபிளில் I Moses 9, 20-27 பகுதியின்படி கருநிறமேனியுடைய இனங்களின் துன்பத்திற்கு கடவுளின் சாபக்கேடே காரணமென்பதும், வெவ்வேறு இனங்களின் வித்தியாசங்கள் அவர்களின் சாபக்கேட்டைப் பொறுத்தே நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்றும் கூறுகின்றது(4). இதனைத்தான் " Lexica of the world missionaries " ம் சொல்கின்றது. இதன்படி கடவுளின் தோற்றம் வெள்ளையாகவும் சாத்தானின் தோற்றம் கறுப்பாகவும் இருக்கும்(5). மேற்கத்திய நாடுகளில் நாம் 99 விகிதமான கடவுளின்படங்களை வெள்ளையரின் நிறத்தில் பார்க்கின்றோம்(4).




இப்படிப்பட்ட பாகுபாடுகள் இந்தநூற்றாண்டில் ஐரோப்பியரால் நசுக்கப்பட்ட இனங்களுள் புரட்சியை ஏற்படுத்தியதுமட்டுமன்றி பிளவுகளையும் தோற்றுவித்தன. உதாரணமாக பல ஆபிரிக்கநாடுகளில் யேசுவின்சிலை கருங்காலிமரத்தினாலே மீளச்செய்யப்பட்டது. கறுப்பு அமெரிக்கர்களில் பலர் இஸ்லாமியமதத்திற்கு மாறினார்கள். இன்றுவரை கிறிஸ்தவம்(யூதம், இஸ்லாம்தவிர) மற்றைய மதங்களை மதங்களாக அங்கீகரிக்காமல் அம்மதங்களைப் பின்பற்றுபவரை கடவுள்நம்பிக்கை இல்லாதோராகக்(heathen) கருதுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பாப்பரசர் நிக்கலௌஸ் V, போர்த்துக்கேயமன்னனுக்கு போர்த்துக்கலுக்கும் ஆபிரிக்காவிற்குமிடையில்




அடிமைகளை வியாபாரம்செய்ய அனுமதித்தபோது இந்நடவடிக்கைமூலம் கடவுள்நம்பிக்கையில்லாத உயிரினங்களை கிறிஸ்தவசமயத்திற்குமாற்றலாம் எனக் கூறி தனதுமுடிவை 1454ம் ஆண்டு நியாயப்படுத்தினார். அடிமைகள்சரித்திரத்தில் இப்படிநடந்தவர்களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காது. வட, மத்திய, தென் அமெரிக்காவில் பலஇலட்சக்கணக்கான (செவ்விந்தியர் என வழிதடுமாறிய கொலம்பஸால்அழைக்கப்பட்ட) அமெரிக்கமரபுவழியினர் அழிக்கப்பட்டு உடல்வலிமை கொண்ட ஆபிரிக்கவினத்தினர் மிருகங்களைப்போல அடிமைகளாக வேலைக்கமர்த்தப்பட்டனர். இந்த நடவடிக்கைகளின்போது உயிரிழந்த ஆபிரிக்கர்களும் கணக்கிலடங்காது. இவர்களில் பலர் ஐரோப்பாவிற்கும் அடிமைகளாகக்கொண்டுவரப்பட்டு வேலைவாங்கப் பட்டனர்.



ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஐக்கியம் எங்கே ?

ஆபிரகாம் லிங்கனின் அரசாட்சியில் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் அடிமைத்தனத்தை நீக்குவதற்காக வட பகுதிஅரசுகள் தென்பகுதிஅரசுகளுடன் சிலவருடங்கள் போரிட்டது நாமறிந்ததே. இவை நடந்து நூறுவருடங்களுக்கு மேலாகியும் அமெரிக்க அரசியலமைப்பில் சமத்துவம் கொட்டைஎழுத்துக்களில் எழுதப்பட்டும் இன்றுகூட தென்பகுதி அரசுகளில் அடிமைத்தனம் சீட்டின்றி நடைமுறையிலுள்ளது. அதுமட்டுமல்ல கறுப்பு அமெரிக்கர்களுக்கு சமவுரிமைகொடுத்ததை தமக்கு அழிவெனப் பிரச்சாரம் செய்யும் 84 சங்கங்கள் ஐக்கிய அமெரிக்கநாடுகளில் உள்ளன. இவர்களுள் அனைவரும் ஆயுதமேந்தியவர்களாவார். இவற்றுள் Ku-Klux-Klan, White Pride, The Heritage Front, Shark-Hunters, Aryan Nationபோன்றவை குறிப்பிடத்தக்கவை. இவர்களால் கொலைசெய்யப்பட்டவர்களின் தொகை கணக்கிலடங்காது.

நாம் இலங்கையில் பாடசாலையில் கல்விகற்றபோது உலகத்தைக்கண்டுபிடித்தது கொலம்பஸெனக்கற்றோம் கொலம்பஸ் இறங்கிய மத்திய அமெரிக்காவில 'வாழும் அமெரிக்கமரபுவழியினரும் அதைத்தான் கற்றார்கள். இதிலிருந்து ஐரோப்பிய நலன்கள் 'மையமாக இருந்ததென்பதும் இது எமக்கு காலனித்துவ காலங்களில் படிப்படையாக ஊட்டப்பட்டதென்பதும் தெளிவாகின்றது. ஐரோப்பியக்கலாச்சாரமே ஒரேயொரு கலாச்சாரமாக அங்கீகரிக்கப்பட்டு இவர்களிலும் பழைமை வாய்ந்த கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள்கூட காட்டுமிராண்டிகளாகப் பட்டம் சூட்டப்பட்டனர். இனக்கலப்பு எதிர்க்கப்பட்டு தம்மினத்தைவிட்டுச் சென்றவர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.


இன்று தென்னாபிரிக்காவில் அமுலிலுள்ள apartheid அதாவது இனஒதுக்கீட்டுக்கொள்கையின் முக்கிய சட்டங்கள் சமயபரப்பாளர்களினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தென்மேற்கு ஆபிரிக்காவில் கலப்புத்திருமணத்தடைச் சட்டம் 1905 ம் ஆண்டில் அமுலுக்குவந்தபோது 'புரொட்டஸ்டன்தேவாலயங்களுக்குரிய சிறுவர் பாடசாலையில் 'கலப்புப்பிள்ளைகளின்' நுழைவு நிராகரிக்கப்பட்டது. 1913 ல் Karibib என்ற இடத்தில் இடம்பெற்ற பாதிரியார்களின்மாநாட்டில் pastor Hasenkamp தம்மினத்தின் தூய்மையையும் மேன்மையையும் பாதுகாக்க இனக்கலப்புத்தடைச் சட்டத்தை பிரேரித்தார்.ஆனால் 'இத்தடுப்புச்சட்டத்தால் ஒரு கலப்பினம் உருவாவதைத் தடைசெய்ய முடியாது என்பதையும் இச்சட்டமீறல்கள்மூலம் பிறக்கும் பிள்ளைகள் "Eingeborene" அதாவது ஆதிகுடிகள் போலக்கணிக்கப்படுவார்கள் என்றும் இவர்களுக்கு வெள்ளையருக்குரிய உரிமைகள் ஒன்றும் இருக்காது என்றும் கூறினார்(8). அதன்படி தென்மேற்குஆபிரிக்காவில் இச்சட்டம் அமுலுக்கு வந்தது. அதேசட்டம் 1949 ல் தென்னாபிரிக்காவிலும் அமுலுக்குவந்தது. Lindequist கவர்னரால் கொண்டு வரப்பட்ட அடையாள அட்டைச்சட்டத்தையும் சில வருடங்களின்பின்னர் தென்னாபிரிக்கா அமுல்படுத்தி இனவாதத்தை அரச கருமமாக்கியது(6).

இதுவரை ஐரோப்பிய இனவாதத்திற்கு அத்திவாரம் போட்ட காரணிகளை சரித்திரத்தில் அவதானித்த நாம் இன்று அழைக்கப்படாத விருந்தாளிகளாக ஐரோப்பாவில் இவர்களுடன் போட்டிபோடும்போது, குறிப்பாக இந்த முதலாளித்துவநாடுகளின் பொருளாதார வீழ்ச்சிநேரத்தில் வீட்டிற்கோ, வேலைக்கோ, Kindergarten இடத்திற்கோ போட்டிபோடும்போது பழைய நிலைமைகளை, பழைய சூழ்நிலைகளை இங்குள்ள பலர் புதுப்பிக்க முயல்வதும், அதற்காகப் பாடுபடுவதும் சர்வசாதாரணம். ஆனால் இம்முறை அதற்கெதிரான போராட்டத்திற்கு நாமே முன்னிற்பது இனவாதத்தை ஒழிக்கமட்டுமல்ல; எம்மை, எமது சமுதாயங்களை சீர்திருத்தவும் பயன்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஐரோப்பிய வலதுசாரிகளை ஹிட்லரின் தேசியசமதர்மக் (Nationalsocialism)கொள்கையை பின்பற்றுபவர்களை அல்லது நாசிஜேர்மனியின் பாரம்பரியத்தைப் பேணுபவர்களை பழைய வலதுசாரிகள் அல்லது வலதுசாரிகளென்றும், பிரான்ஸின் வலதுசாரிகளின் " Nouvelle Droite " கொள்கையின்படி ஒரு பழமைவிரும்பிய (conservative) கலாச்சாரப்புரட்சிக்குரிய சூழ்நிலையை உருவாக்க எத்தனிக்கும் இளைய தலைமுறைகளை புதியவலதுசாரிகளென்றும் இருவகையாகப் பிரிக்கலாம்.

"Nouvelle Droite என்பதன் சொற்கருத்து புதிய வலதுசாரிகள் என்பதாகும். இந்தப்பெயரைக்கொண்ட இவ்வியக்கம் 1891–1937 க்கிடையில் வாழ்ந்த இத்தாலிய கம்யூனிசவாதியான Antonio Gramsci இருபதுகளில் சிறையில் எழுதிய கலாச்சாரப் புரட்சிபற்றிய கோட்பாட்டை இக்காலத்திற்கேற்றவகையில் மாற்றியதோடு ஒரு கலாச்சாரப் புரட்சிமூலம் அதிகாரத்தை அடைய வழிவகுத்து காலப்போக்கில் மக்களின் மனப்போக்கை மாற்றுவதுடன் அவர்களின் வரைவிலகணங்களை புதிதாக வரையறை செய்யவும் முயற்சி செய்கின்றது."

**புதிய வலதுசாரிகள்**

1965 ம் ஆண்டு பிரான்ஸின் வலதுசாரிகள்மத்தியில் ஒருமுக்கிய விவாதம் எழுந்தது. வலதுசாரிக்கட்சிகள் அத்தனையும் ஒன்றுசேர்ந்து தங்களில் ஒருவரை ஜனாதிபதித்தேர்தலுக்கு அனுப்பியும் அவர்களுக்கு ஐந்துவிகிதத்திற்குமேல் வாக்குகள் கிடைக்கவில்லை. இத்தேர்தலில் போட்டியிட்டவர் Jean Louis Tixier-Vignancourt. தேர்தல் பொறுப்புக்களை நடத்தியவர் Jean-Marie Le Pen.

இவர்களின் விவாதத்தின் இறுதியில் அரசியல்செல்வாக்கை அல்லது அதிகாரத்தைப்பெறமுன்னர் கலாச்சாரச்செல்வாக்கைப்பெறவேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு GRECE (Groupement de Recherche et d' Etudes pour la civilisation Europeene)என்ற ஐரோப்பியநாகரிக கல்வியாராய்வுக்குழு என்ற அமைப்பு உருவாகியது. GRECE பாராளுமன்ற வெற்றியை நோக்கிப் போராடாமல் massmedia அதாவது பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற துறைகளில் செல்வாக்கைப்பெற முயற்சித்தது.

உதாரணமாக Le Figaro Magazins (சஞ்சிகை)ன் –350 000 பிரதிகள்– ஆசிரியர்குழுவில் Nouvelle Droite ன் புத்திஜீவியான Alain de Benoist ஐப் புகுத்தினார்கள். இதன்மூலம் GRECE இற்கு மேலும் புத்திஜீவிகளை தம்வசம்சேர்த்துக்கொள்ளமுடிந்ததோடு வருங்கால பத்திரிகையாளர்களையும் உருவாக்கியது. அத்துடன் சமுதாயத்தில் தனது கொள்கைகளைப் பரப்பவும் முடிந்தது.

புதியவலதுசாரிகள் இறக்குமதிசெய்யப்பட்டசமயமென்ற காரணத்தால் கிறிஸ்தவத்தையும் எதிர்ப்பதோடு ஒரு ஆதிசெர்மானிய (இன்றைய ஜேர்மன் அல்ல) வாழ்க்கைமுறையை தேர்ந்தெடுத்துள்ளனர். ஒரு பழமைவிரும்பிய கலாச்சாரப்புரட்சியின் கோட்பாட்டுவாதிகளான Moeller van den Bruck, Carl Schmitt , Vilfredo Pareto போன்றவர்களும் இயற்கையின் இயல்தேர்வுமுறை கோட்பாட்டின் ஆசிரியனான Charles Darwin போன்றோரும் இவர்களின் குறிப்பீடுகள். இவர்களின் விவாதங்கள் வலதுசாரிப் பத்திரிகைகளிலும் பல்கலைக்கழகச் சஞ்சிகைகளிலும் பிரசுரமாவது மட்டுமல்ல பல ஐரோப்பியப் புத்திஜீவிகளையும் இக்கருத்துக்கள் கவர்ந்துள்ளன. மார்கழி 92 வெளிவந்த Europa vorn என்ற பத்திரிகையில் ஐரோப்பியக்கட்சிகளை அவதானிக்கும்போது மக்களை ஏமாற்றுகின்ற, ஊழலான, சந்தர்ப்பவாதியான எருமைக்கூட்டங்களே இன்று அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றதென்றும் தமது உயர்விற்காகக் கட்சியில்சேர்வோர் தொடர்ந்து இந்நிலைமையை நீடித்துவைத்திருக்கின்றார்களென்றும் இக்காரணங்களினால் தாம் கட்சியரசியலை கடுமையாக எதிர்ப்பதாகவும் கூறியுள்ளார்கள். 3.கார்த்திகை1990 அன்று Koblenz நகரத்தில்நடந்த மாநாட்டில் வலதுசாரிப்பேராசிரியர்கள் தமது கருத்தாய்வுபற்றியும் சமுதாயத்தில் தமது கருத்துக்களைப் பரவ தொடர்ந்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்பற்றியும் ஆராயப்பட்டதோடு தமக்கிடையில் பாரிய தொடர்புகளையும் ஏற்படுத்தினர்.

இதிலிருந்து வலதுசாரித்தனமோ அல்லது இனவாதமோ விபரம்'தெரியாத நான்கு இளைஞர், யுவதிகளால் அல்லது Pubs, Eck Kneipe, Bistro களில் உருவாகும் கருத்துமட்டுமல்லவென்பதும் இதை எதிர்த்துப்போராடுவோருக்கு சமூகத்தின் சகல வர்க்கங்களையும் ஆராயவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதும் புரியும். பள்ளி அல்லது பல்கலைக்கழகப்படிப்பு இனவாதிகளை மனிதாபிமானிகளாக்க முடியாதென்பது சரித்தரம் கண்ட உண்மை. அது மட்டுமல்ல ஒப்பீட்டளவில் எமக்கு மனிதாபிமானிகளாக விளங்கும் பல ஐரோப்பிய போலிஇடதுசாரிகள்மத்தியில் நிலவும் இனவாதத்தை எதிர்த்துப்போராடுவது, அவர்கள் தாம் இடதுசாரிகள்–அதனால் இனவாதிகள் அல்லர்– என்று ஆரம்பத்திலேயே விவாதத்திற்கு முற்றுப்புள்ளிவைப்பதனால், மிகவும் கடினமென்பதும் எமதுஅனுபவம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**வலதுசாரிகள் (பழைய வலதுசாரிகள்)**

ஜேர்மனியைப் பொறுத்தவரை பல எதிர்க்கருத்துக்கள் இருந்தும் இவர்களை

(1) வலதுசாரிகள் என்றும்

(2) வலதுசாரித்தீவிரவாதிகள் என்றும்

இருவகுப்புக்களாகப் பிரிப்பது இப்பிரச்சனையை விளங்கிக்கொள்ள எளிதாகவிருக்கும். வலதுசாரிகளாக பாராளுமன்றரீதியில் இனவாதத்தைக்கக்குபவர்களையும் தீவிரவாதிகளாக Baseball தடிகளையும் கத்தி, கோடரி, துப்பாக்கி, எரிகுண்டு போன்றவற்றை தேசிய ஆயுதமாக்கி, Springerstiefel என்றழைக்கப்படும் காலணிகளுடன் வெளிநாட்டவர், இடதுசாரிகள் போன்றோரைத் தாக்குபவர்களையும் வகுப்போம். இவர்கள் அனைவரின் முக்கியகொள்கை இனவாதமாவதால் அதைப்பற்றி ஒவ்வொருமுறையும் குறிப்பிடவில்லை.

**வலதுசாரிகள்**

இரண்டாவது உலகமகாயுத்தத்தின்பின்னர் 1949ம் ஆண்டு பழைய நாசிகளால் Sozialistische Reichspartei (SRP) உருவாக்கப்பட்டது. இதில் பழைய SS, SA ( Hitler ன் இராணுவம் ) ஐச் சேர்ந்தவர்களே 90 விகிதமாகக்காணப்பட்டனர். இதில் கிட்டத்தட்ட 10000 பேர் அங்கம்வகித்தனர். இக்கட்சி 1952ல் தடைசெய்யப்பட்டு

a) Die Deutsche Freiheitsbewegung

b) Die Deutsche Reichspartei (DRP)

என்ற பெயர்களில் தொடர்ந்து இயங்கியது. DRP 1953, 1961 ம் ஆண்டுகளின் தொடர்ச்சியான தோல்விகளுக்குப்பின்னர் 1964ம் ஆண்டு இக்கட்சி புனர்நிர்மாணிக்கப்பட்டு Nationaldemocratische Partei Deutschlands (NPD)என்றபெயரில் இயங்குகின்றது.

**(1) NPD**

மேற்குஜேர்மனியின் பொருளாதாரவீழ்ச்சிநேரங்களில் தனது இலாபத்தையடையும் இக்கட்சிக்கு அறுபதுகளில் ஏழு நாடாளுமன்றங்களில் பிரதிநிதித்துவம் வகிக்கமுடிந்ததுடன் 29000 அங்கத்தவர்களையும் கொண்டிருக்கமுடிந்தது. 1966ல் Bayern 7.4 % Hessen 7.9 %, 1968ல் Baden-Wuertenberg 9.8 % போன்றவை இவர்களின் சாதனைகளாகவிளங்கியபின்னர் 1969ல் இடம்பெற்ற பாராளுமன்றத்தேர்தலில் 4.3 % மட்டுமே கிடைத்ததாலும் உட்கட்சிப்பூசல்களினாலும் இக்கட்சி குறுகி 9000 பேர்களை தற்சமயம் கொண்டுள்ளது. தலைவர் Guenter Deckert அரசியல்ஆலோசகர் Manfred Roedel தலைமைப்பீடம் Stuttgart நகரம்.

**Junge Nationaldemokraten ( JN )**

NPD இன் இளைஞர்களைக்கொண்ட இவ்வியக்கம் தம்மை போராளிகளாகக் கணிப்பதோடு சுமார் 1200 பேர்களையும் கொண்டுள்ளது. தலைவர் Erhard Huebchen. தலைமைப்பீடம் Stade நகர்.

**Nationaldemokratischer Hochschulbund**

NHB- இது NPD இன் பட்டதாரிகளையும் பல்கலைக்கழக மாணவர்களையும்கொண்ட இக்குழு 600 பேர்களைக்கொண்டது. தலைவர் Thomas Lux தலைமைப்பீடம் Wuppertal நகர்

**(2) DVU (Deutsche Volks Union)**

Deutsche National Zeitung, Deutsche Wochen Zeitung, Deutscher Anzeiger போன்ற பிரபல வலதுசாரிப்பத்திரிகைகளின் வெளியீட்டாளரான Dr. Gerhard Frey இன் முயற்சியில் கட்டியெழுப்பப் பட்ட இக்கட்சி இன்று சுமார் 30000 பேர்களைக் கொண்டுள்ளது. Bremerhaven 10.3 % உடனும் Bremen 6.2 % உடனும் Schleswig-Holstein 6.3 % உடனும் நாடாளுமன்றங்களில் அங்கம்வகிப்பதோடு ஜேர்மனியின் பாடசாலைப்புத்தகங்களில் நாசிஜேர்மனியின்மீதான குற்றச்சாட்டு அகற்றப்பட வேண்டுமென்ற பிரச்சாரத்தையும் மேற்கொள்கின்றது. தலைமைப்பீடம் Muenchen நகர்.

**(3) Die Republikaner ( REP )**

CSU கட்சியிலிருந்து விலகியவர்களால் 1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சியை 1989 வரை பலர் முக்கியமானதாகக் கருதவில்லை. 1989ல் நடந்த பெர்லீன்நாடாளுமன்றத்தேர்தலில் இவர்களுக்கு 7.5 % உம் அதைத்தொடர்ந்து ஐரோப்பியப்பாராளுமன்றத்தேர்தலில் 7.1 % உம் பெற்றதுடன் மேலும் Hessen, Nordrhein Westfalen, Rheinland Pfalz போன்ற நாடாளுமன்றங்களில் அங்கம்வகிப்பதோடு Baden-Wuerttemberg நாடாளுமன்றத்தில் மூன்றாவது கட்சியாகவும் விளங்குகின்றனர். இவர்களின் சில உட்கட்சிப்பிரச்சனைகளால் கடந்தகாலங்களில் பல தோல்விகளையும் எதிர்நோக்கினர். தலைவர் Franz Schoenhuber, தலைமைப்பீடம் Bonn நகர் கட்சியிலுள்ளோர் சுமார் 31000 பேர். மாற்றுவலதுசாரிக்கட்சிகளிலிருந்து இக்கட்சிக்கு பலர் பதவிகளுக்காக மாறினார்கள். தேர்தல் செலவுகளுக்காக ஐரோப்பியப் பாராளுமன்றம் இவர்களுக்கு 160 இலட்சம் மார்க் கொடுத்தபின்னர் இவர்களால் புதிய கிளைகளை திறக்கவும் அலுவலர்களைவேலைக்கமர்த்தவும் முடிந்தது.



Günter Deckert, NPD



Franz Schönhuber, Republikaner



Harald Neubauer, Deutsche Liga für Volk und Heimat



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REP கட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட முன்னாள் Carl-Schurz-Stiftung என்றழைக்கப்பட்டு, தற்போது Franz-Schoenhuber-stiftung என்றழைக்கப்படும் நிதியத்தின் உதவியால் வருங்கால புத்திஜீவிகளை தமது கொள்கைகளுடன் இவர்களால் உருவாக்க முடிகின்றது. இந்நிதியத்தில் நிர்வாகிகளாக இருப்பவர்களுள் ஜேர்மனியில் முக்கிய விஞ்ஞானிகளை உருவாக்கிய Siemens-Stiftung இன் மனேஜர் Armin Mohler மற்றும் NATO Defence College இன் கொமாண்டர் Dr.Franz Uhle-Wettler போன்றோர் அடங்குவர்.

## (4) Die Deutsche Liga fuer Volk und Heimat ( DL )

விரக்தியடைந்த முன்னாள் NPD, DVU, REP போன்ற கட்சிக்காரர்களால் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சியில் பல பழைய வலதுசாரிகள் உள்ளனர். 1990 இல் REP இற்குக் கிடைத்த தோல்விகளின்பின்னர் 1991 ல் இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. கட்சியிலுள்ளோர் சுமார் 5000 பேர். தலைமைப்பீடம் Landshut நகர். தலைவர்கள் Harald Neubauer, Juergen Schuet-zinger, Rudolf Kendzia. ஊர்காவல்படைகளை சில ஊர்களில் இக்கட்சி உருவாக்கியதால் பிரபலமாகினாலும் பாராளுமன்றரீதியில் வெற்றியடையவில்லை.

வலதுசாரித்தீவிரவாதிகள்/நியோநாசிகள்

இவர்கள் பலஇடங்களில் வெவ்வேறு குழுக்களாக இயங்கினாலும் தமது பொதுஎதிரி என்று ஒருவரை அல்லது ஒரு குழுவை அல்லது ஒரு இனத்தை கருதும்பட்சத்தில் அவர்களுக்கெதிரான தாக்குதலை ஒன்றிணைந்து நடத்தி இலங்கையிலிருக்கும் எம்மியக்கங்களிலிருந்து வேறுபடுகின்றார்கள். அரசு ஒரு குழுவைத் தடைசெய்யும்போது அது வேறுபெயரில் இயங்குகின்றது. இவர்கள் கடிதமூலமாகவோ தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொள்வதில்லை. இவர்களிடையேயுள்ள தொடர்புகள் மிகவேகமாக இருக்கின்றன. மேற்குறிப்பிட்டகாரணங்களால் இவர்களை அவதானிப்பது கடினமாகவுள்ளது.

## (1) Die Wiking-Jugend ( WJ )

ஹிட்லரின் SS இல் இப்பெயருடன் ஒருபகுதியிருந்தது. பழைய Hitler-Jugend, Bund Deutscher Maedel போன்ற நாசிஜேர்மனியின் இளைஞர், யுவதிகளின் அமைப்பைப்போல் இவ்வியக்கம் அமைக்கப்பட்டது. அதாவது உயிரினரீதியான செர்மானிய (வட ஐரோப்பிய ஆதிகுடிகள்) மரபுவழியைக்கொண்டவர்களின் பலத்தையும் ஒற்றுமையையும் அடிப்படையாக வைத்துச் செயற்படுகின்றது. இனக்கலப்பை எதிர்ப்புடன் தம்மினத்தின் "தூய்மையைப்" பாதுகாக்க மாற்று இனங்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவது மட்டுமன்றி அவர்களோடு பழகுபவர்கள், கலந்தோர், குரல்கொடுப்பவர்கள் போன்றோரைத் தாக்குவதும் இவர்கள் குறிக்கோள். கிட்டத்தட்ட 2000 பேரைக் கொண்டுள்ள இவ்வியக்கத்தின் வருடச்சந்திப்பு Celle நகருக்குப் பக்கத்திலுள்ள Hetendorf என்ற கிராமத்தில் பாசறையமைத்து இராணுவப்பயிற்சியுடன் நடைபெறும். தமது இயக்கஅங்கத்தவர்சஞ்சிகையில் ஐரோப்பா மாற்றுஇனங்களால் நிரம்பிவிட்டதெனவும் "குறைந்த தரமுடைய" ("minderwertige") இனங்களைப் பெருகவிடாதுதடுத்தலும் "தரங்கூடிய" ("hochwertige") இனங்களிலுள்ள தேகநலமுடையவர்களின் தொகையைப் பெருக்கலும் தமது நோக்கமென எழுதப்பட்டுள்ளது. பத்துவயதுக்கு மேற்பட்டவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதோடு மாணவ, மாணவிகளுக்கான பத்திரிகையான "Gaeck" பாடசாலைகளில் இரகசியமாக இவர்களால் விநியோகிக்கப்படுகின்றது.




வலதுசாரிக்கட்சிகள் தமது பத்திரிகைகளில் இவர்களுக்கு விளம்பரம் செய்யும்போது "நாட்டுப்பற்றுள்ள மக்களே! நாளை உங்கள் பிள்ளைகள் உங்களுக்கெதிராக ANTIFA (பாசிசத்திற்கெதிரான) ஊர்வலத்தில் செல்லாதிருக்கவேண்டுமானால் உங்கள் பிள்ளைகளை Wiking-Jugend இற்கு அனுப்புங்கள்" என்றுஎழுதுவார்கள். NPDஇன் வருடஊர்வலம், Brandenburg நகரில் FAP இன் ஊர்வலம், பெல்ஜியத்தில் நடக்கும் Ijzerbedevaart, ஸ்பெயினில் இடம்பெறும் Franco நினைவு தினம், Halbe என்ற நகரில் இடம்பெறும் மாவீரர்தினம், Rudolstadt இல் இடம்பெறும் Rudolf Hess நினைவுதினம் போன்றவற்றில் ஊர்வல ஆரம்பத்தில் கொடிபிடிப்பது இவர்களே. 1952 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இவ்வியக்கத்திற்கு ஐரோப்பிய, அமெரிக்க இனவெறி இயக்கங்களுடன் நல்லதொடர்புகள் உண்டு. உதாரணமாக Juventud Vikinga (ஸ்பெயின்), Vlaams Nationale Jeugd (பெல்ஜியம்) மற்றும் ஸ்கன்டினேவிய, ஐக்கிய இராச்சிய, பிரான்சிய, நெதர்லாந்திய இயக்கங்களும் அடங்கும். தலைவர் Wolfram Nahrath.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Michael Kuehnen, முன்னாள் தரைப்படைலெப்டின ன்ட், மற்றும் Christian Worch, Thomas Brehl போன்றோரால் ஆரம்பிக்கப்பட்ட Aktionsfront Nationaler Sozialisten / Nationalen Aktivisten ( ANS/NA ) என்ற இயக்கம் 1983 இல் உள்ளூர் அமைச்சராலும் 1986 இல் நீதிமன்றத்தாலும் தடை செய்யப்பட்டு பின்னர் எட்டாகப் பிரிந்து அதில் பெரும்பாலானோர் கீழ்க்குறிப்பிட்ட இயக்கத்திற்குச் சென்றனர். மற்றைய ஏழு இயக்கங்களிலுள்ளவர்களின் தொகை 200 இற்குக் குறைவாகவிருப்பதால் நான் அவர்களை இக்கட்டுரையில் குறிப்பிடவில்லை.

## (2) Freiheitliche Deutsche Arbeiterpartei ( FAP )

பலஉட்கட்சிப் பிளவுகளைக்கொண்டிருந்த இக்கட்சி Michael Kuehnen இன் மரணத்திற்குப்பின்னரும் 1989 இல் Nationale Sammlung தடைசெய்யப் பட்டபின்னரும் Friedhelm Busse ஐ தலைவராகக் கொண்டுள்ளது. 800 அங்கத்தவர்களைக் கொண்ட இவ்வியக்கம் நாசிஜேர்மனியின் கொள்கைகளை நிறைவேற்றுவதில் தீவிரமாகவுள்ளது. தலைமைப் பீடம் Oberhausen நகர்.

## (3)Deutsche Alternative ( DA )

Bremen நகரிலிருந்தFAP இயக்கம் கலைக்கப்பட்டு இந்த இயக்கம் 1989 நிறுவப்பட்டது. 2000 பேர்க ளைக்கொண்ட இவ்வியக்கத்தின் தலைமைப்பீடம் Cottbus நகரில் உள்ளது. பல அரசியல்தஞ்சங்கோரிய வர்களின் முகாம்களை எரித்ததில் பிடிபட்டவர்களுள் இவர்கள் முக்கியமானவர்களாதலால் இவ்வியக்கம் 8.12.1992 இல் உள்ளூர்அமைச்சரால் தடைசெய்யப் பட்டு

(a) Der Deutsche Weg (DW)
(b) Den Nationalen Block (NB)
(c) Die Saechsische Nationale Liste (SNL)
(d) Volkstreue Liste (VL)
(e) Deutsches Hessen (DH) என்று ஐந்து மாநிலஇயக்கங்களாகப்பிரிந்து தொடர்ந்தியங்குகின்றது. பழைய தலைவர் Frank Huebner.

## (4) Die Nationalistische Front ( NF )

Bielefeld நகருக்குப் பக்கத்தில் 1985 நிறுவப்பட்டு. Detmold நகரில் தனது தலைமைப்பீடத்தைக்கொண் ட சுமார் 600 பேரைக்கொண்ட இவ்வியக்கம் பெருமளவிலான ஆயுதங்கள் வைத்திருந்ததாலும் பலரைத்தாக்கியதாலும் 26.11.92 அன்று தடைசெய் யப்பட்டு

(a) Sozialrevolutionaere Arbeiterpartei
(b) Freiheitlichen Mitteldeutschen Jugend என்ற பெயர்களில் தொடர்ந்தியங்குகின்றன. NF இன் முன்னாள் தலைவனாக Skinheads இன் பாட்டுக் குழுவான Kraft durch Froide ஐச் சேர்ந்த Siegfried Pohl இருந்தான்.

## (5) Die Nationale Liste ( NL )

Hamburg நகரத்தில் தலைமைப்பீடத்தையும் 300 அங்கத்தவர்களையும் கொண்ட இவ்வியக்கத்திற்கு Thomas Wulff தலைவன்.

## (6) Gesinnungsgemeinschaft der Neuen Front ( GdNF )

ஹிட்லரின் இனவகுப்புக்கொள்கையை உடனடியாக நடைமுறைப்படுத்துவதும் மற்றைய இனங்களை விதிவிலக்கின்றி உடனடியாக நாட்டைவிட்டு வெளி யேற்றுவதும் இவர்கள் கொள்கைகள். தலைவன் ஆஸ்திரியாவைச்சேர்ந்த Gottfried Busse. இயக்கத் திலுள்ளவர்கள் சுமார் 1600 பேர். ஆரியர் என்ற அடி ப்படையில் செயற்படும் இக்கட்சியினர் Neue Front என்ற பெயரிலும் இயங்குவதுண்டு.

## (7) Nationale Offensive ( NO )

Augsburg நகரில் தலைமைப்பீடத்தைக் கொண்ட, 1700 பேரையும், Michael Swierczek ஐ தலைவரா கவும் கொண்ட இவ்வியக்கம் வெளிநாட்டவரின் சட்டமீறல்களை பதிவுசெய்வதைத்தவிர வேறெதுவும் கொள்கையாகவிருப்பதை அவதானிக்கமுடியவில்லை.

## (8) Die Deutsche Freiheitsbewegung

Kaufbeuren கிராமத்தில் தலைமைப்பீடத்தைக்கொ ண்ட, 800 பேரை அங்கத்தவர்களாகக்கொண்ட இவ்வியக்கத்தின் தலைவர் Georg Albert Bosse இவ்வியக்கத்தை ஸ்தாபித்தவர் நாசிகளின் தரைப் படையின் (Wehrmacht) மேஜர் Otto-Ernst Remer ஆகும்.

மேற்குறிப்பிட்ட இயக்கங்கள் அனைத்தும்

## (9) Hilfsorganisation fuer nationale politische Gefangene und deren Angehoerige ( HNG ) இல் அங்கத்த

வர்களாக இருக்கின்றனர். HNG வலதுசாரிகளுக்கு ஒரு Amnesty International ஆக இருப்பதுடன் கைதுசெய்யப்பட்டவர்களையும் அவர்கள் குடும்பத் தையும் பராமரித்து தேவையான பணத்தையும் வழக் கறிஞர் ஒழுங்குகளையும் செய்கின்றனர். இவ்வியக்கத் திற்குப்பின்னால் பெருந்தொகையான பணத்தைக்கொ ண்ட நிறுவனங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## (10) Skinheads

இவ்வியக்கம் அறுபதுகளில் இங்கிலாந்தில் வேலையில்லாத பகுதிகளில் உருவாகி அங்குவசிக்கும் மாற்று இனங்களை தமது வறுமைக்கு காரணமாகக்கருதி அவர்களைத் தாக்கியது. எழுபது, எண்பதுகளில் ஐரோப்பா முழுவதும் இவ்வியக்கம் பரந்திருந்தாலும் தொண்ணூறுகளிலேயே இது அரசியல் மயப்படுத்தப் பட்டது. இதுவரை இதற்கு தலைவர், செயற்குழு போன்ற அமைப்புக்கள் இல்லை. ஆனால்

- வெள்ளை இனத்தின் நிலைப்பிற்கு ஆபத்தாக குடிபெயர்ந்துவரும் மக்கள், இனக்கலப்பு, சர்வதேசக்கொள்கை போன்றவற்றை எதிரிகளாகக் கருதப்பட்டு அழிக்கப்படுவார்கள். தம்மை வெள்ளை இனத்தின் பொலிசாராக (பழைய SS பாணி) கருதும் இவர்களின் இலக்குகளாக வெளிநாட்டவர், இடதுசாரிகள், தன்னினச்சேர்க்கையர், நாடோடிகள், ஊனமடைந்தவர்கள் போன்றோர் விளங்குவர்

முன்னொருகாலத்தில் தமது மொட்டையால் தம்மைக் காட்டிக்கொண்ட இவர்கள் இப்போது மொட்டையடிப் பதில்லை. Springerstiefel ( இராணுவக்காலணி ) அணிவது வழக்கம். இவ்வியக்கத்தில் பலபிரிவுகள் உண்டு. ஜேர்மனியில்மட்டும் சுமார் 6000 பேர் உள்ளனர். இவர்களுக்கென்று உலகெங்கும் 87 பாட்டுக்குழுக்கள் உள்ளன.

## (11) Hooligans

15000 பேர்களைக்கொண்ட இவர்கள் கால்பந்தாட்டக் குழுக்களின் இரசிகர் மன்றங்களாக இருப்பதும் போட்டிகளில் தமது கைவரிசையைக் காட்டுவதும் நாம் அறிந்ததே. வலதுசாரிக்கட்சிகள் இவர்கள் மத்தியில் தமது அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வது வழக்கம்.

**ஜேர்மன்நாசிகளின் வெளிநாட்டுத்தொடர்புகள்/ வெளிநாட்டு இனவாதிகளின் ஜேர்மனித்தொடர்புகள்**

•Nationalsozialistische Deutsche Arbeiterpartei -Auslands-und Aufbauorganisation

இவர்களின் "தளங்கள்" பல ஜேர்மனியில் இருந்தும் தலைமைப்பீடம் Lincoln/Nebraska, USA இல் உள்ளது. இதன் தலைவர் Gary Rex Lauck

1991 இல்மட்டும் ஜேர்மனியில் 72 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டன. இவை இவ்வியக்கத்தின் பெயரில் செய்யப்பட்டன.



வலதுசாரித்தீவிரவாதத்தில் ஒவ்வொருநாடும் தனது தனித்துவத்தைப் பெற்றிருந்தாலும் இவர்களுக்கிடையில் பாரிய அளவில் வேலைத்திட்டங்கள் இடம்பெறுகின்றன. இரண்டாவது உலகமகாயுத்தத்திற்குப்பின்னர் இப்போது சூழ்நிலைகள் சாதகமாக இருப்பதைப்போல் எப்போதுமே இவர்களுக்கு இருந்ததில்லை.

*பிரான்ஸின் வலதுசாரிகளின் முக்கிய கட்சியான Front National ( தலைவர் Le Pen ) இற்கு 93 மார்ச் நடந்த தேர்தலில் 32 இலட்சம் மக்கள் வாக்களித்தனர். பத்து தேர்தல்வட்டாரங்களில் இவர்களுக்கு 40 % மேலே வாக்குகள் கிடைத்தன.

*பெல்ஜியத்தில் Vlaams Blok கட்சிக்கு 11 % வாக்குகள் கிடைத்தன. Antwerpen நகரில்மட்டும் 21 % வாக்குகள் கிடைத்தன.

*இத்தாலியில் Leghe கட்சிவெற்றிக்கோஷமிடுகின்றது

*நெதர்லாந்தில் தற்போது இரு நாடாளுமன்றங்களில் அங்கம்வகிக்கும் Centrum Demokraten (CM) மார்ச் 94 இடம்பெறும் தேர்தலில் பாராளுமன்றத்தில் பலஇடங்களைப் பிடிக்குமென்பது அரசியல்அவதானிகளின் கருத்து.

*ருஷ்யக்குடியரசில் வலதுசாரிகளைத் தவிர்த்து எந்த பிரச்சனையையும் தீர்க்கமுடியாதநிலை உருவாகிவிட்டது. Schirinowskij ஹிட்லரின் கொள்கைகளை தன் கொள்கைகளாக்குவான் என்று யாரும் கனவு காணவில்லை.

*அழிக்கப்பட்டுவிட்டது என்று நம்பிய தேசியவாதமும் இனவாதமும் கிழக்கைரோப்பாவில் ( போலந்து, முன்னாள் செக்கோசிலோவாக்கியா, ஹங்கேரி, ரூமெனியா, முன்னாள் யூகொஸ்லாவியா etc.) பூதாகாரவடிவில் வளர்ச்சியடைகின்றது.

* ஆஸ்திரியாவில் Freiheitlichen Partei Oesterre -ichs (FPO) இன் தலைவர் Joerg Haider இற்குக் தேர்தலில் கிடைத்த வெற்றிக்குப் பின்னர் அவனுடன் தொடர்பு வைக்காத கட்சிகள் இல்லை

**இவர்களின் முக்கிய சந்திப்புக்கள்**

# Ulrichsbergtreffen ஆஸ்திரியாவில்
# Ijzerbedevaart பெல்ஜியத்தின் Diksmuide இல்
# Rudolf Hess Treffen ஜேர்மனியில்
# Franco நினைவுதினம், ஸ்பெயினில்

இச்சந்திப்புக்களுக்கு British National Party, White Pride, Ku-Klux-Klan, The Heritage Front (USA) மற்றும் சுவீடன், டென்மார்க், நோர்வே தென்னாபிரிக்கா, சிலி, ஆர்ஜென்டீனா குருவாசியா அயர்லாந்து போன்ற நாடுகளிலிருக்கும் இனவாத இயக்கங்களின் பிரதிநிதிகள் வருகைதந்து தத்தமது வேலைத்திட்டங்களையும் தொடர்புகளையும் வளர்ப்பது வழக்கம்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வலதுசாரிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகள் (ஒருசில தவிர்ந்த) இனவாதத்தைப் பிரச்சாரம் செய்வதன் மூலமே வலதுசாரிகளை தோற்கடிக்கின்றனர். இதன் மூலம் ஆளையாள் போட்டிபோட்டுக்கொண்டு இனவாதத்தை வளர்க்கின்றார்களேயொழிய இனவாதத்திற்கெதிராகப் போராடவேண்டுமென்பவர்கள் ஜேர்மனியிலும் குறைவு. இலங்கையிலும் குறைவு.

1986 இல் தேர்தலில் அரசஅதிபர்பதவிக்கு Helmut Kohl (CDU) ம் Johannes Rau (SPD)ம் போட்டி போட்டபோது கிழக்குஜேர்மனியால் வரும் அகதிகள் தேர்தல் தலையங்கமாகவிருந்தது. வலதுசாரிமக்களின் வாக்குகளைப் பெறவிரும்பிய SPD தனது "சோசலிச உறவைப்" பாவித்து வரும்வழியை மூடச்செய்தும் Rau ஆல் தேர்தலில் வெற்றிபெறமுடியவில்லை. இது ஒரு படிப்பினையாகவிருந்தும் அகதிகள் விடயத்தில் SPD இனவாதத்தைவளர்த்தது. அதுமட்டுமல்ல, 1994 இல் நடக்கவிருக்கும் தேர்தலுக்கு" உள்நாட்டுப் பாதுகாப்பும் வெளிநாட்டவர் குற்றச்செயல்களும் " ("Innere Sicherheit und Auslaenderkriminalitaet") என்ற தலைப்பில் கட்சிகள் போட்டிபோட்டுத் தொடர்ந்தும் இனவாதத்தை வளர்ப்பதை எம்மைத் தாக்குபவர்களின் எண்ணிக்கையிலிருந்து நாம் கண்டுகொள்ளலாம்.

எமது சொந்த நாட்டிலோ போட்டிபோட்டுக்கொண்டு இனவாதத்தை வளர்த்த UNP, SLFP போன்ற கட்சிகள் தமிழ்மக்கள் பிரச்சனையையும் தீர்க்கவில்லை. சிங்களமக்கள் பிரச்சனையையும் தீர்க்கவில்லை. மாறாக பொதுமக்களை ஏழையாக்கி, ஏழையை பிச்சையெடுக்கவைத்து தம்பையை நிரப்பிக்கொண்டார்கள். குழந்தைகள் விபச்சாரத்தில் இன்று இலங்கை பிரேசில், தாய்லாந்திற்கு அடுத்ததாக அதாவது மூன்றாம் இடத்தை வகுக்கின்றது. குழந்தைகளிடம் தமது இன்பத்தைக்காணும் தன்னினச்சேர்க்கையாளருக்கும் சீரினச்சேர்க்கையாளருக்குமென குழந்தைகளினதும் விடுதிகளினதும் விபரப்பட்டியல் உல்லாசப் பயணமுகவர்களால் மேற்கத்தியநாடுகளில் விநியோகிக்கப்படுகின்றன. அங்குள்ள விடுதிகள் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டு பெற்றோர் சம்மதத்துடன் இயக்கப் படுகின்றன. இதில் தமிழ், சிங்கள பிள்ளைகளே முக்கிய இடத்தை வகிக்கின்றனர்(7).

வடகிழக்கைப்பொறுத்தளவில் எமது பிள்ளைகளின் உடல் மனோநிலைகள் பாதிக்கப்பட்டு பாடசாலைக்கல்வியும் பாழடைந்துள்ளது. ஒருகாலத்தில் எம்மைப் பாதித்த தரப்படுத்தல் இன்னும் பத்துவருடங்களில் அதுவின்றி எம்மினம் பல்கலைக்கழகத்தினுள் நுழையமுடியாது என்ற சூழ்நிலை உருவாவது சாத்தியம்.

வெளிநாட்டில் குடிபெயர்ந்த/அகதிகளாக வந்தவர்களைப் பொறுத்தளவில் எம்மில் பலர் இனவாதத்தை எதிர்நோக்கப் பயந்து, வாங்கிய காரில் வீட்டின்முன் ஏறி வேலையிடத்தில் இறங்கி, விடுமுறைதினங்களில் வீட்டிற்குள்ளேயே அடைந்து, வீடியோ பார்த்து, வாழ்க்கைநடத்தி, எமது பிள்ளைகளையும் அப்படியே வளர்க்கின்றோம். வருடத்திற்கொருமுறை நாட்டிற்குச் சென்று நாட்டுமக்களுடன் எமது பிரச்சனைகளை ஒப்பிடும்போது எமதுநிலை ஆயிரம்மடங்கு திறமாகத் தெரிகின்றது. எமது European / American way of life ஐ சாத்தியப்படுத்தும் நாயகர்களுக்கு பணம் பொருள் கொடுத்து வளர்க்கின்றோம். இதில் எமது பொறுப்பின்மை, நாட்டுநிலைமையிலுள்ள அசட்டைத்தனம் வெளியாகின்றது. முதலாளித்துவ நாடுகளில் நிலவும் பொருளாதாரவீழ்ச்சி ( Recession ) அதைத் தொடரும் வேலையில்லாத்திண்டாட்டம், வீட்டுப் பற்றாக்குறை போன்றவை இலகுவில் தீர்க்கக்கூடிய பிரச்சனைகள் இல்லையென்பதும் அதற்கெதிராக எந்தக் கட்சியிடமும் தீர்வு இல்லையென்பதும் மறுக்கமுடியாத உண்மை. எம்மை வெளியேற்றுவது மூலம் பிரச்சனைகளைத் தீர்க்கலாமென்ற வலதுசாரிகளின் திட்டம் மனித உரிமைச்சங்கங்கள், ஐக்கிய நாடுகள் சபை போன்றவை இருக்கும்வரை சாத்தியப் படாதபோதும் வலதுசாரிகளின் தாக்குதல்கள், வீடு எரிப்புக்கள் போன்றவை எம்மை ஒருகாலத்தில் சொந்தநாட்டிற்கு போவதற்கு நிர்ப்பந்திக்கலாமென்பதை அண்மையில் நடந்த பல சம்பவங்கள் எமக்கு எடுத்துக்காட்டின. அப்படியில்லாதபட்சத்தில் எமது பிள்ளைகளை வேலைச்சந்தை கணக்கெடுக்காதபோதாவது எமக்கு ஞானம் பிறக்கலாம். அப்போதாவது நாம் திரும்பும் எமதுதாய்நாட்டின் நிலையும் அதன் அரசியலும் எமது பிள்ளைகள் படித்தபடிப்பும் எமக்கு முக்கியமாக இருக்கும்.

(1)"Die Geschichte der Kirche in Lateinamerika" ( DUSSEL. Enrique , Mainz 1988 )
"The Defence of Human Rights in Latin America" ( ZAVALA, Silvio UNESCO 1964 )
(2)" Human Rights and the Issues of War and Peace" (University Teachers for Human Rights Jaffna 92)
(3)"International Herald Tribune" (Will, George 90)
(4) "The Concept of God in Black Theology / Black Theology" (NTAWASA, Sabelo / MOORE,Basil The South African Voice, London 1973 )
"Kolonisieren heisst Missionieren" ( Pastor SKOLASTER, Herrmann Berlin 1924 )
"Missionary Teachers as Agents of Colonialism" (TIBERONDWA, Ado, Lusaka 1978 )
" Esclavage et Colonisation " ( CESAIRE, Aime Paris 1948 )
(5) "Lexica of the World Missionaries" ( NEILL/ MORITZEN/SCHRUPP/ANDERSON/GOODWIN)
(6) "Kolonialherrschaft und Sozialstruktur in Deutsch Suedwestafrika 1894 - 1914 " ( BLEY, Helmut Hamburg 1968 )
(7) PEACE (Protecting Environment and Children Everywhere) / ECPAT - Interview (Suedasien93)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம், இனப்பிரச்சனைக்குத் தீர்வு""" என்ற கோஷத்துடன் ஒரு பொதுக்கூட்டம் நடத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விடுத்த அழைப்பிற்கு நவசமசமாஜக்கட்சியின் சார்பில் தோழர். வதிருநாவுக்கரசு எழுதிய கடிதம்.

'கௌரவதிருமதிஸ்ரீமாவோபண்டாரநாயக்க. எம்பி
தலைவி ஸ்ரீ.ல.சு. கட்சி
கொழும்பு – 10.
07.01.94.

அம்மணி

'பயங்கரவாதத்திற்கு யுத்தம் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு'

மேற்படி சுலோகத்தை முன்வைத்து 15.12.93 ல் நுகேகொடையில் தங்கள் கட்சியினால் பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பங்குபற்றுவதற்கு எமது கட்சிக்கு விடுத்த அழைப்பை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால் எமது கட்சி இந்த யுத்தத்தை முற்று முழுதாக எதிர்க்கின்றது. இனப்பிரச்சனையென்று நீங்கள் இனங்கண்டு ஏற்றுக் கொள்ளும் அதே பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வு காணத்தவறியதாலேயே இந்த யுத்தமானது ஆரம்பித்து இவ்வளவு பேராபத்துப் பாதையில் சென்று கொண்டுர்க்கிறது. உங்கள் அழைப்பை எமது அரசியல் குழுவில் விவாதித்த போது மேற்படு பிரச்சார நடவடுக்கையில் பங்குபற்றுமாறு என்னாலும் எனது கட்சியை வலியுறுத்த முடியாத நிலையிருந்தது. ஏனென்றால் மேற்படி பிரச்சாரத்தில் ஒரு அரசியல் தீர்வு காண முடிவு எதுவும் இல்லை. மாறாக உங்கள் கட்சியின் சுலோகத்தின் பிரகாரம் யுத்தத்தை தொடருவதற்கே முதலிடம் அளிக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ச்சியான விமானக்குண்டு வீச்சினாலும், பீரங்கித்தாக்குதல்களினாலும் ஏற்கனவே பெருமளவு உயிர் உடமை அழிப்புகள் ஏற்பட்டுள்ளன. அது மட்டுமன்றி குறிப்பாக வடக்கை பொறுத்தளவில் பொருளாதாரத்தடைக்குச்சமமான கட்டுப்பாடுகள் விதித்ததின் காரணமாக தமிழ்ப்பேசும் மக்கள் மோசமான பசி, பட்டினி துன்ப துயர நிலைகளுக்கு ஆளாக்கப்பட்டு வந்துள்ளனர்.

ஜனாதிபதி விஜேதுங்க "இனப்பிரச்சனை ஒன்று இல்லை. ஆனால் பயங்கரவாதப்பிரச்சனை மட்டுமே உண்டு" என்று மார்தட்டி வருகின்றார். எனவே ஆளும் ஐ.தே.கட்சி யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு கங்கணம் கட்டி நிற்கின்றது. மறுபுறத்தில் உங்கள் கட்சியோ இனப்பிரச்சனையை ஏற்றுக்கொள்ளும் அதே வேளை ஒரு அரசியல் தீர்வை முன் வைக்காமல் யுத்தத்தை தொடர வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. அரசியல் அமைப்பின் 13 வது திருத்தத்தின் கீழ் தற்காலிகமாகவேனும் இணைக்கப்பட்டிருக்கும் வடக்கு–கிழக்கு அலகை பிரிக்க வேண்டும் என ஆளும் கட்சி அறைகூவல் விடுகின்றது. உங்கள் கட்சியின் நிலைப்பாடும் இதேதான். எனவே ஒட்டு மொத்தமாக ஐ.தே.கட்சியின் நிலைப்பாட்டுக்கும் உங்கள் கட்சியின் நிலைப்பாட்டுக்கும் இடையில் எதுவித வித்தியாசமும் இல்லை. உங்கள் கட்சியின் தலைமையில் 1988ல் ஜனநாயக மக்கள் முன்னணி சார்பாக முன் வைக்கப்பட்ட விஞ்ஞாபனத்தை பற்றிய பேச்சே இன்று இல்லை. தமிழ்–முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தை இருகூறுகளாக பிரிக்க வேண்டும் என்பதே உங்கள் கட்சியின் நிலைப்பாடாக இருக்கின்றது.

நாட்டை ஒரு யுத்த நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும். அனைத்து நிதிவளங்களையும் யுத்தத்திற்கு பயன்படுத்த வேண்டும் எனவும் நீங்கள் கூறியுள்ளீர்கள். உங்கள் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ்.எஸ்.குணசேகர, அனில்முனசிங்க ஆகியோர் உங்கள் கூற்றை முற்று முழுதாக ஆதரிக்கின்றனர். உண்மையில் உங்கள் கட்சி வலியுறுத்துவதுயாதெனில்

(அ) வடக்கிலும் – கிழக்கிலும் மென்மேலும் அழித்தொழிப்புகள் பெருக்கெடுத்துக்கொண்டிருக்க வேண்டும்.

(ஆ) நாளாந்தம் அதிகரித்த வண்ணம் இருக்கும் இராணுவ செலவினங்கள் காரணமாக மக்கள் மீது மேலும் பழுக்களைச் சுமத்த வேண்டும்.

(இ) மேலும் கூடுதலான வறிய சிங்கள இளைஞர்கள் யுத்த முனைக்கு தீனியாக அனுப்பப்பட வேண்டும்.

1956 கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச்சட்டம் மற்றும் மோட்டார் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகள் சிங்கள 'ஸ்ரீ' யாக மாற்றியமைக்கப்பட்டதுமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆரம்பத்தில் இரத்தக்களரியை ஏற்படுத்த காரணமாக இருந்தது என்பது உங்களுக்குத் தெரியாத விடயமல்ல. 1961ல் வடபகுதிக்கு முதன் முதலாக இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டதும் அதன் பின் படிப்படையாக இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டதும் நீங்கள் அறிந்த விடயமாகும். அரசாங்கங்கள் தமிழ்ப்பேசும் மக்களுக்கு எதிராக செயல்பட்டதை எதிர்த்து முன்னெடுக்கப்பட்ட சாத்வீகப் போராட்டங்களை நசுக்குவதற்காகவே இத்தகைய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்ப்பகுதிகளில் மேற் கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், மற்றும் தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் ஒருதலைப்பட்சமாக மறுத்ததும் செவிசாய்க்காமையும் ஏற்கனவே தமிழ் இளைஞர்களை போராட்டப்பாதைக்குத்தள்ளிக் கொண்டிருந்தன. 1970களின் முற்பகுதியில் மொழிவாரியான தரப்படுத்தல் காரணமாக பல்கலைக்கழகத்திற்கான அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு குந்தகம் ஏற்படுத்தப்பட்டதே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கும், தமிழீழ தனி இராச்சியம் அமைப்பதற்கு போராடுவதற்கு வழிவகுத்தது. குறிப்பாக சுதந்திரத்திற்குப்பின் தமிழ்ப் பேசும் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட புறக்கணிப்புகளும், அடக்கு முறைகளும், நீண்டகாலமாக இடம் பெற்று வந்த பின்னரே இளைஞரின் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதென்பதை நிதானமாகச் சிந்திக்கும் எவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வடக்கையும், கிழக்கையும் ஒரு இணைந்த அலகாக ஏற்கமறுப்பதுடன் தமிழ்ப்பேசும் மக்களுக்கு உரித்தான அளவு சுயாட்சி அதிகாரம் வழங்குவதற்கும், ஏதே போன்ற மறுப்பு காட்டப்பட்டு வருகின்றது. அம்மக்கள் மீது முற்று முழுதான ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்தையும், அவர்கள் எதற்கும் அடிபணிய வேண்டும் என்ற எண்ணத்தையுமே இது வெள்ளிடை மலை போல் காட்டுகின்றது. இத்தகைய அணுகு முறைகள்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தனி நாட்டுக் கோரிக்கையை மென் மேலும் நியாய பூர்வப் படுத்துகிறது. தமிழ் - முஸ்லீம் சிறு பான்மையினரின் மீது தனது ஆதிக்கத்தை திணிப்பதற்கு கொழும்பில் உள்ள ( சிங்களப் பெரும்பான்மை ) அரசாங்கத்திற்கு என்ன உரிமை உண்டு? அம்மக்களுடன் அரசியல் அதிகாரத்தைப் பகிர்வதற்கு ஏதோச்சதிகாரமாக மறுப்பதையும், அவர்கள் மீது மேலாதிக்கம் செலுத்தும் கொள்கையையும் இது தெட்டத் தெளிவாக காட்டவில்லையா?

"ஒரு சமஷ்டி அடிப்படையிலான தீர்வும், வடக்கு கிழக்கிலிருந்து அரச படைகள் கௌரவமாக வாபஸ் பெறப்படுவதும் விரும்பத்தக்கது" என்ற கருத்தை திருமதி சந்திரிகா குமாரணதுங்கா முன்வைத்துள்ளார். இது அண்மைக் காலத்தில் தெரிவிக்கப்பட்ட அர்த்தபுஷ்டியான கருத்தாகும். இவ்வாறான அணுகு முறையினால்தான் நாடு ஒன்றாமிருக்க முடியும். இந்த யுத்தம் நாட்டின் பெரும்பான்மையான - அதாவது குறிப்பாக ஏழை எளிய மக்களை மோசமான முறையில் உருக் குலைத்து வருகிறது. எனவே யுத்தத்தை அவர்கள் வெறுக்கிறார்கள். இந்த யுத்தமானது இது வரை ஏறத்தாழ ரூபா 250 மில்லியன்களை விழுங்கியுள்ளதென்பதை நீங்கள் அறிவீர்கள். இத் தொகையானது மகாவலித் திட்டம் போன்ற நாலு திட்டங்களுக்குப் போதுமானதாகும். இதன் காரணமாக பரந்து பட்ட மக்களின் சுகாதாரம், போஷாக்கு, கல்வி, வேலைவாய்ப்பு, வீடமைப்பு, நெடுஞ்சாலை போன்ற வசதிகள் எவ்வளவு தூரம் துண்டாடப் பட்டுள்ளன என்பதை சிந்தித்துப் பார்ப்பது கடினமான காரியமல்ல.

இன்றைய யுத்ததிற்கு இட்டுச் செல்வதற்கான தவறுகளை எல்லா அரசாங்கங்களும் நேரடியாகவும், மறைமுகமாகவும் இழைத்துள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது. சிங்களத்தையும், தமிழையும் அரச கரும மொழியாக்கினால் நாடு ஒன்றாமிருக்கும், சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்கினால் நாடு இறுதியில் இரத்தம் சிந்தும் இரு துண்டுகளாகி விடும் என்று 1956ல் இடதுசாரித் தலைவர்களே அடித்துக் கூறினர். அன்று அது முற்றாக உதாசினப்படுத்தப்பட்டது. 30 வருடங்கள் கழிந்த பின், அதுவும் இந்திய அரசின் தலையீட்டின் காரணமாகவே (1987) தமிழும் ஒரு அரசகரும மொழியாக்கப் பட்டது. (இதுவும் ஏட்டளவிலேதான் உள்ளது) அது போலவே 30 வருடங்களுக்குப் பின்னரே மோட்டார் வாகனங்களின் இலக்கத் தகடுகளில் இருந்து சிங்கள 'ஸ்ரீ' அகற்றப்பட்டது.

வடக்கு - கிழக்குப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் காண்பதற்கு ஸ்ரீ.ல.சு.கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினராகிய மங்களமுனசிங்க தலைமையிலேயே ஒரு தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது என்பதை நீங்கள் சற்றுப் பெருமையுடன் குறிப்பிட்டிருந்தீர்கள் போலத் தெரிகிறது. இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குத்தான் கடந்த 30 வருட காலத்தில் சர்வகட்சி மகாநாடு, வட்ட மேசை மகாநாடு, பண்டாரநயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டதையும் அவையாவும் காற்றில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பறக்க விடப்பட்டதையும் நீங்கள் அறிவீர்கள். மங்கள முனசிங்க பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு உங்கள் கட்சியோ, ஆளும் ஐ.தே.கட்சியோ எந்த வித ஆலோசனைகளையும் முன் வைக்கவில்லை. மேற்படி பாராளுமன்ற தெரிவுக் குழுவு, தமிழ் கட்சிகளினால் முன் வைத்த நாலு அம்சக் கோரிக்கையைக் கருத்தில் கூட எடுக்கவில்லை. இந்த நிலையில் ஆளும் ஐ.தே.கட்சி இந்த யுத்தத்தை நடத்துவதற்கும், உங்கள் கட்சி அதற்குப் பலத்த ஆதரவு வழங்குவதற்கு என்ன தர்ம நியாயம் உள்ளது?

வடக்கு கிழக்கு யுத்தம் தொடர்பாக: உதாரணமாக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஜேர்மன் பிரதி வெளிநாட்டு அமைச்சர் ஹெல்முட் ஷெபர் கூறியதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். " உங்களின் எல்லா மக்கள் பிரிவினரினதும் நியாய பூர்வமான நலன்களை கணக்கில் எடுக்கத் தக்கவான அரசியல் தீர்வு மிக அவசியமான தாகும். அவ்வாறான வழியில் இப்பிரச்சனையைக் கையாண்டால்தான் அது மீண்டும் தலை தூக்குவதை தவிர்க்க முடியும்." என்பதே அவர் கூறியுள்ள கருத்தாகும். இது போன்ற கருத்தைப் பல உள்நாட்டு, வெளிநாட்டு பிரமுகர்களும் தெரிவித்துள்ளனர்.

அரசியல் தீர்வுக்கான பிரேரணைகளை ஸ்ரீ.ல.சு.கட்சி முன் வைக்கட்டும் பார்ப்போம். ஒரு அரசியல் தீர்வினால் மட்டுமே இந்த யுத்தத்திற்கு முடிவு கட்ட முடியும். பேரின வாதிகளைத் தவிர ஏனைய அனைத்து மக்களும் இந்த யுத்தத்தினால் முற்று முழுதாக அலுத்துப் போயிருக்கிறார்கள் என்பதை நான் மீண்டும் கூறிவைக்க விரும்புகிறேன்.

எனவே உங்கள் நிலை என்ன என்பதை மக்களுக்குத் தெரிவியுங்கள்.

இப்படிக்கு

வ.திருநாவுக்கரசு
( அரசியல் குழு உறுப்பினர் : நவசமசமாஜக் கட்சி)


( 6ம் பக்கத் தொடர்ச்சி )

தமிழ் முஸ்லீம் மக்கள் அதைப் பெருமளவில் நிராகரித்துள்ளனர் என்பதையே பதிவான வாக்குகள் - எத்தனையோ வாக்குச்சாவடி மோசடிகள் மத்தியில் - தெளிவுபடுத்தின. தமிழ்க் குழுக்களினால் நியமிக்கப்பட்ட சுயேச்சைக் குழுக்கள் சுமார் 150,000 வாக்குகளையும், முஸ்லீம் காங்கிரஸ் 87,000 வாக்குகளையும் பெற்றுள்ளன. சுமார் 250,000 தமிழ் முஸ்லீம் வாக்காளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை நிராகரித்துள்ளனர். இந்தப் பகுதியில் எந்த விதமான ஸ்திரமான அமைப்பையும் கொண்டிராத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 63,000 வாக்குகளைப் பெற்றது.

அரசாங்க படைகள் கைப்பற்றிய பிரதேசங்களில் "சமாதானமாக வாழும்" 300,000 மக்கள் அரசின் தடைகள், மோசடிகள், பொலீஸ் இராணுவ கெடுபிடிகள் எல்லாவற்றையும் மீறி ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக வாக்களித்துள்ளனர் என்பதையே காட்டியுள்ளது. இவ்வளவு வாக்குகள் ஒரு ஜனாதிபதி தேர்தலில் பாரதூரமான பாதிப்பை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இதனால்தான் ஜனாதிபதியை பொது வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்வதற்குப் பதிலாக பாராளுமன்ற மூலமாக தெரிவு செய்யும் முயற்சிகளை ஐக்கிய தேசியக்கட்சி செய்துவருகின்றது.

அனுரா பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அரசாங்கக் கட்சியில் இணைந்தமை, காமினி திசநாயக்காவின் மீள் வருகை, இனவாதப் பிரசாரம் எல்லாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உதவவில்லை. டிங்கிரி பண்டாவின் எதிர்காலம் கேள்விக் குறிதான்...................................................



www.tamilarangam.net

# சிந்தனை



ஆரம்பம் 1985

சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.

**1/94**

*30.03.1994*

ஆறு இதழ்களுக்கான சந்தா


30 டிஎம்.

தொடர்புகளுக்கு:

**SINTHANAI**
**Haussmann str.107,**
**70188 Stuttgart**
**Germany**

ஆணிவேர் அறுந்த நான்

- சோலைக்கிளி -



## ஆணிவேர் அறுந்த நான்

**சோலைக்கிளி**

★

ஆசியா வெளியீடு

★

படைப்பாளி என்பவன் அவன்சார்ந்த தேசத்தின் நிகழ்காலப் பிரச்சனைகளிலிருந்து விலகி நிற்றல் என்பது போலியானது. கவிஞனின் பார்வை என்பது கற்பனை உலகிற்கு அப்பால் யதார்த்தத்தினை அறிவு கொண்டு பார்ப்பதாகும். இக்கவிதைத் தொகுதியில் வரும் சோலைக்கிளியின் 47 கவிதைகளும் இதையே எமக்கு உணர்த்துகின்றன.

: பதிப்புரையிலிருந்து.

▽

தனிப்பிரதி விலை : 25 F.F.

△

கிடைக்குமிடம்:

**ASSEAY**
**3, Allee Paul Leautaud,**
**95200 Sarcelles,**
**France**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்